1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 2-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு தைமாதம் 17-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## தவறை ஒப்புக்கொண்டால்

மத்தியான வேளையில் ஒருநாள் உச்சிவெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. தாங்கமுடியாத வெப்பம். காற்று கொஞ்சம்கூட இல்லை. இந்தச் சமயத்தில் நான் கல்லூரியினுள்ளே ரசாயன பரீட்சைசெய்துகொண்டிருந்தேன். அப்போது எனக்குத் தலைவலி. ஆயாசமாகவும் இருந்தது. அந்தப் பரீட்சையை முடித்துவிட்டுத்தான் வீட்டிற்குப் போவதுஎன்று எண்ணியிருந்தேன். அசம்பாவிதமாகப் பரீட்சைக்கு முக்கியமான கண்ணடிக்குழாய் தவறி, அதனுள்ளேயிருந்த பாதரசம் முத்துமுத்தாய்த்தெறித்துவிழுந்தது. அந்தக்குழாயும் உடைந்துவிட்டது. கல்லூரியில் அதைத்தவிர வேறொன்று இல்லைஎன்பதும் எனக்குத்தெரியும். ஆகையால், செய்தபிழை பெரியது. என்றாலும், வீட்டிற்குச் சென்றுவிட்டேன். புரொபெஸர் வந்து பார்த்து, என்னை வைதுகொண்டிருந்தாராம். "அவனை என் அனுமதியில்லாமல் இந்தஅறையில் சேர்க்கவேண்டாம்" என்று அங்கிருந்த அற்றன்டரிடம் எச்சரிக்கைசெய்தும்போயிருந்தார். அவர் மிகவும் கோபக்காரர்.

மறுநாள் எனக்கு நடந்தசமாச்சாரத்தைச் சொன்னார்கள், என் சிநேகிதர்கள் ஒவ்வொருவரும். அவர் "இப்படிச்சொல்வார், அப்படிச்சொல்லுவார் சாக்கிரதை" என்று சொல்லி என்னைப்பயமுறுத்தினார்கள். எனக்கோ, "என்ன சொல்வாரோ" என்று பயம். தயங்கிக்கொண்டே அவர் அறைக்குச் சென்றேன். "யாரது?" என்று கோபக்குரலிலேயே கேட்டார். "சேர், நான்தான். நேற்றுஒருதவறு நடந்துவிட்டது. என்னை மன்னிக்கவேண்டும். நேற்று நான் தங்களிடம் வந்து சொல்லாமல் போனது மிகப்பெரியபிழை. ஆகையால், தாங்கள் தயவுசெய்து என்னை........" என்று சொல்லி முடிப்பதற்குள் அவர், "சரி, சரி, ஏன் நேற்றேவந்து என்னிடம் சொல்லக்கூடாது?" என்றார்.

நான் பதில் சொல்லவில்லை. ஆனால், தவறைஉணர்ந்த முகத்தின் பிரதிபிம்பம் அவருக்குத் தெரிந்தது. "இந்தத்தடவை உன்னை விட்டுவிடுகிறேன். உடைந்த சாமானைப் பதிவுசெய்யும் காகிதத்தில் நீ எழுதவேண்டாம், போ" என்றார். வெளியில் வந்து நடந்ததை என் நண்பர்களிடம் கூறினேன். "நீ பெரிய அதிர்ஷ்டசாலி அப்பா" என்றார்கள். "அதிர்ஷ்டமாவது, என்தவறை நான்ஒப்புக்கொண்டேன். அவரது கடின சித்தமும் இரங்கிற்று. மனதஇயல்பு படைத்தவர்தானே அவரும்" என்றேன். பிழையை ஒப்புக்கொள்வதால் பிழையொன்றும் நேருவதில்லை. ஒப்புக்கொள்ளாவிட்டால், அது நம்மை உறுத்திக்கொண்டேயிருக்கும். "தவறுவது மனித இயல்பு; மன்னிப்பது தேவ இயல்பு" என்று லத்தீன்பழமொழி கூறுகிறது.

அ. பெஞ்சமின், B. Sc. (Hons.)

ஒருசில வருஷங்களுக்கு முன் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. பத்திரிகைகளில் அல்பேட் ஐன்ஸ்ரீனை (Albert Einstein)ப் பற்றிக் கொட்டைஎழுத்துக்களில் எழுதினார்கள். எதைப்பற்றித்தெரியுமா? அவருடைய மனமாற்றத்தைப்பற்றித்தான். நோபல் பரிசுபெற்ற இவர், தம்முடைய பரஸ்பரவாதம் (Relativity theory) மூலம் பௌதீக நூலையே புதியமுறையில் அமைக்க ஆரம்பித்தார். தற்கால விஞ்ஞான முன்னேற்றம் (அணுக்குண்டுவிசித்திரம்) இந்த விளைவால்தான். சுமார் 73வயது நிரம்பிய இவர் அப்போதுஜேர்மனி நாட்டில்தான் வதிந்துவந்தார். ஹிற்லரின் கொடுங்கோன்மையானது நாஸிக்கொள்கைகள் மூலம் வெளிவந்தது. பல்கலைக் கழகங்களும், பத்திரிகைகளும் புகழ்பெற்ற இவருக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. எந்தப்பல்கலைக் கழகங்களுக்காக அரும்பாடுபட்டாரோ, அவைகள் இவருக்கு உதவியளிக்க — இவரைக் காப்பாற்ற முன்வரவில்லை. பத்திரிகை ஆசிரியர்களோ ஒருவரிகூட இவரைச் சிலாகித்துச்சார்ந்து எழுதவில்லை.

பாவம், இவர் ஒரு யூதர். ஹிற்லர் "யூதர்களை ஒழித்துக் கட்டுவது" என்ற கொள்கையை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## எமது பாத்திமா யாத்திரை

ஸ்ரீ எட்வாட் காசிச்சிற்றி அவர்களும், அவர்பாரியாரும் ஐரோப்பாவிலே சுற்றுப்பிரயாணஞ் செய்து ரோமாபுரி, லூர்துபதி, பாத்திமாபதிஆதியாம் திருசேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டு இலங்கை வந்து சேர்ந்திருக்கின்றனர். பாத்திமாபதியைத் தரிசித்தபோது, அங்கே தேவதாயாரின் காட்சிபெற்ற ஜசிந்தா, பிரான்சீஸ் எனும் பிள்ளைகளின் பெற்றோரை நடுவிடமாகக்கொண்டு இவர்கள் பிரதிமைப்படம் பிடிக்கப்பெற்றுள்ளனர். இந்தப் பிரதிமைப்படம் கொழும்பிலே பிரசுரமாகும் இலங்கைக்கத்தோலிக்க வாரவெளியீடாகிய "மெசெஞ்சர்" பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அதனால் ஸ்ரீமதி காசிச்சிற்றி அவர்கள் பாத்திமாபதி யாத்திரையைப்பற்றி எழுதியுள்ளதே மூந்தமூந்த ஈண்டுதமிழில் இசைத்துப் பொழிப்பாகத் தரப்படுகிறது.

எனது நாயகரும், நானும் உலகிலுள்ள இருபதுதேசங்கள் வரையிலே தரிசிக்கும் இன்பகரமான பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். ஐரோப்பிய தரிசனையின் ஓர்பகுதியானது மனமாரஅறிந்தோ அன்றேல்அறியாமலோ கத்தோலிக்கருக்கு உண்மையான ஓர் யாத்திரையாகின்றது. ஏனெனில், ஐரோப்பிய நாடுகள் கத்தோலிக்க திருச்சபைச் சரித்திரத்தின் விசேஷப்பட்ட சின்னங்களுடன் கூடியனவாய், விருத்தியடைந்திருப்பதாலே இது தவிர்க்க முடியாததாகின்றது. லூர்துபதியிலும், ரோமாபுரியிலும் நாங்கள் கண்டதெல்லாம் எங்கள் பாத்திமாபதித் தரிசனைக்கு ஓர் நல்ல ஆயத்தமாய் இருந்தது. ரோமாபுரியிலிருந்து தென்னமெரிக்க ஆகாயவிமானம்ஒன்றிலே நாங்கள் போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன் நகருக்குப் பறந்து சென்றோம். ஸ்பானியதேச மதிரித் நகரிலே விமானம்தங்கின்ற ஒருமணிநேரமுட்பட இந்தப் பிரயாணத்துக்கு ஏறக்குறைய ஆறு மணிநேரம் பிடித்தது. லிஸ்பன் நகரிலிருந்து பாத்திமா ஸ்றேஷனுக்கு றெயின்வண்டியில் புறப்பட்டோம். இந்தத் தூரம்நூறுமைல்வரையிலாகும். இலங்கையின் பசுமையான வளம் பொருந்திய ஏராளமான மரங்கள், செடிகள், பயிர்பச்சைகளுடன் பரிசயப்பட்டிருந்த எங்களுக்குப் பாத்திமாபதி இருந்துவரும்நாடு அதிகமாக ஓர் வெறுமையான நாடாகவே காட்சியளித்திருக்கின்றது. அது பெரும்பாலும் ஒலிவமரங்களாலும், கிடைச்சி மரங்களாலும் தேங்கியிருக்கிறது. களைப்பூண்டுகள்தானும் அத்துணை ஏராளமாய்ச் செழித்து வளருகின்ற எமது உற்பத்தி வளம்பொருந்திய பூமியுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது அதன் தோற்றம் வளமற்றதாகவே இருக்கின்றது. அங்குள்ளமக்களும் தாரித்திரநிலைமைகளின்கீழ் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதை ஒவ்வொன்றுமே தெளிவாகக்காண்பிக்கின்றது.

இப்பகுதியிலுள்ள புனிதமான ஸ்தலங்களை நாங்கள் தரிசித்தோம். இங்கே விருந்தாடிகள் விடுதிஒன்றைக் கொண்டிருப்பவரான டக்றர் லூயிஸ் ச்லேஸ் என்பவரது பாதுகாப்பிலே தங்கியிருந்தோம். இவர் ஆங்கிலபாஷை பேசுகின்றமையால் இந்தவிடுதியில் தங்குவது அதிகம் தகுதியாகும். இன்னும் ஒருவர் தமக்குத் தேவையானவைகளைப் பெறக்கூடியனவாய இங்குள்ள சிலஇடங்களில் இது ஒன்றாகும். பாத்திமாவிலே செலவிட்ட மூன்று தினங்களிலும் நாங்கள் ஓய்வின்றியே பலவற்றிலும் ஈடுபடலானோம்.

ஜசிந்தாவின் உடல் ஓர்பெரியயகாலயத்தில் இருக்கின்றது. அங்கே புதுமைகள் நடைபெறுவதாக எல்லோருமே நம்புகின்றனர். அவைகள் அதிகாரிகளால் பதிவுசெய்து பரிசோதிக்கப்படுகின்றன. ஓர் கொள்ளைநோய் நடைபெற்றபோது பிரான்சீஸ்மரித்தமையால் அவனது உடல் இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால், அது கண்டுபிடிக்கப்பட்டுவிடுமென்றே பொதுவாக எதிர்பார்க்கப் படுகிறது. உலகமானது செபமாலை மூலமாகத் தேவதாயாருக்குப் போதியதோர் பக்திபற்றுதல் காண்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈனந்தீர்ந்த கூனற்சைமன்

காலமோ, காரிருள் சூழ்ந்து கடுந்துயர் இழைக்கும் கடுமாரி. அன்று நிலவிய குளிரின் கொடுமையோ சொல்லுந்தரமன்று. ஓங்கிவீசும் குளிர்காற்றினைத் தாங்கஇயலாதுவெப்பந்தரும் போர்வைகளை வாரியெடுத்து வரிந்துகொண்டு, கால்நடையாகவும், கழுதை வாகனராகவும் செல்லும் இவர்கள் யார்? இவர்கள் எங்குசெல்கின்றார்கள்?

இவர்களா? ஆம், செசார் அகுஸ்துஸ் என்னும் சக்கிரவர்த்தியின் கட்டளையொன்று உண்டு. அவன் விதித்த சட்டம் என்றால், சகலரும் கைகட்டிக்கொண்டு, உடனடியாக நிறைவேற்ற வேண்டியதுதான். அந்த இந்த எந்த விதமான கேள்விக்கும் இடமில்லை. அவ்வளவுதான். உரோமைஇராச்சியத்திற்குட்பட்ட எலலாமனிதரும் தாங்கள் பழமையாகக்குடியிருந்த தங்கள் தங்கள் சொந்தநகரங்களிற் போய்ச் சேர்ந்து குலத்தின் தலைமுறையோடு கையிறையும், குடிசனமதிப்புக்குரிய எண்ணிக்கையும் கொடுக்க வேண்டும் என்பதுதான் அந்தக்கட்டளை.

இதுகாரணமாகவே, பாலர்முதல் வயோதிபர்வரை ஆண்பெண் யாவரும் செல்வர் வறியவரென்று அல்லத்தட்டாது கும்பல்கும்பலாகக் குளிரும்பனிரும் பாராது—முள்ளோ கல்லோ என்னாது— அரசகட்டளைக்கு அமைந்து, செல்லுகின்றார்கள். எங்கே? பெத்லேகேம் நகரினைநோக்கி.

பெத்லகேமை நோக்கிச்செல்லும் பெருவீதி வழியே இருவராய், மூவராய்,குடும்பமாய், கும்பலாய் ஒருவரையொருவர் முந்திக் கொண்டும்— விரைவசைந்திக்கொண்டும்சென்ற ஆயிரக்கணக்கானவர்களை அச்சிறுநகரம் கொள்ளுமா? இடமில்லையென்றுதான் தள்ளுமா? அந்தச் சக்கரவர்த்தியும் காலமறிந்து கட்டளைவிடுத்தானு? குளிரும் பனியும்வருத்த நடுங்கி ஒடுங்கிப் பசியும்பட்டினியுமாகச் செல்லும்மக்களின் கதி என்னருகுமோவெனச் சிந்தித்தானு? இல்லவே இல்லை.

எனினும்மக்கள் சிறுகமுறுமுறுத்த போதிலும் அரசகட்டளைக்கமைந்து, குடிஎண்ணிக்கை கொடுக்கும் கடப்பாட்டினை உணர்ந்து, நீலவானம் கணணிமைப்பதுபோல—விண்ணிலே நட்சத்திரங்கள் துலங்கும் அந்திவேளையிலே நகரத்தினுள்ளேயே அடைந்தார்கள். ஈசலோவென வாசலேதாறும் மக்கள்கூட்டம் ஒரேகோசமாக ஆர்ப்பாட்டஞ்செய்தது.

அதோ அவ்வீதியில் ஒருசிலர் தயங்கித்தயங்கிச் செல்லுகின்றனரே. ஒரு கிழவர் கிழவனுர். அவரது நடுக்கும் கரத்தினல் இறுகப்பிடித்து உரப்பி உரப்பிச் செலுத்தப்படுவது ஓர் சிறியகழுதை. அக்கழுதைமேல் பொம்மைபோலத் துடுக்கின்றி அமர்ந்திருக்கிறுன் பத்துவயதுச்சிறுவன் ஒருவன். ஐயோ பரிதாபம்! அந்தச்சிறுவனின் முதுகுதான் என்ன ஒரு மாதிரித் தோற்றுகிறதே?—வில்லைப்போல வளைந்து காணப்படுகிறதே. ஓரிடத்தில் இரண்டு— கூனல்கொண்டு தோற்றுகின்றதே. நிமிரவோ, நிற்கவோ, நடக்கவோ இயலாத நிலையிற் தோன்றும் இவன்யாரோ?

இவன்தான் அந்தவிழுகிழவனுர் ஒசியஸ் என்பவரின் பேரப்பிள்ளை. கழுதையின்முதுகிலே இருந்திருந்து, கூன்முதுகு நொந்துநொந்து, இத்தனை தூரம் வந்துசேர்ந்திருக்கும் கூனற்சைமன். என்னபரிதாபம்! அவனும் கூன்முதுகு நொந்துகொண்டு மேற்கொண்டுசெல்ல இயலாது தனது பாட்டனரிடம் முறையிடுகின்றான்.

சைமன்:- பாட்டா! அந்தப்பெத்லகேம் நகரம் என்னகிட்டவா? அன்றேல்எட்டவா? என்னல் குளிர்தாங்க முடியவில்லையே. என்கைகளும் கால்களும் மரத்துப்போயினவே. இனி என்னுல் இக்கழுதைமேல் அமரவோ இயலாது. உடல் நடுங்குகின்றது. பசியோ குடலைப்பிடுங்குகின்றது. என் செய்வது பாட்டா?

கிழவனுர்:- குழந்தாய் சைமன்! தைரியமாயிரு. நகரங்கிட்டிவந்து நமதுபயணமும் முடிவடைகிறது. எனது உறவினர் இலலம் அதோ தோற்றுகிறது. அங்கே எங்கள்குளிரைப்போக்கச்சகல வசதியும் கிடைக்கும். வந்தவர்களுள் நாங்கள்தான் அதிகம்பிந்திப்போனேமாக்கும்.

சைமன்:- இல்லை, பாட்டா! எங்களுக்குமுன்னே — சற்று எட்டத்திலே அதோபாருங்கள் இருவர் பயணஞ் செய்துகொண்டிருக்கிறுர்கள். ஒரு பெரியவர் கழுதைஒன்றை நடத்திச் செல்லுகின்றுர். அக்கழுதைமேல் அம்மையார்ஒருவர் வானத்தின் நிறமொத்த நீலவர்ண ஆடை அணிந்து செல்லுகின்றுர். நீங்கள் அவர்களைக் காணவில்லையா?

கிழவர்:- ஆம், ஆம், அதோகாண்கின்றேன். உண்மையாகவே அவர்களும் எங்களைப்போலவே பயணத்தினல் களைத்துவிட்டார்கள்போலும்.

சைமன்:- நல்லது பாட்டா! நாங்களும சற்றேவிரைந்துசென்று அவர்களைச் சேருவோம். ஆளும்பேருமாக நாலாறுபேர் கூடிச்சென்றுல் பயணக்களைப்பும், தூரமும் தோன்றுது அல்லவா?

பண்டிதர் V. A. ஜோண்பிள்ளை

இதைக்கேட்டதே கிழவனுர் தனது கழுதையை மெதுவாகஉரப்பிச் செலுத்திக்கொண்டு சிறிதுவேளையில் முன்னேசென்றபிரயாணிகள்இருவரையும் போய்ச்சேர்ந்தார். அவர்களைக் கண்டதும் கிழவனுருக்குத் தன்னையறியாமலே ஓர்விதஅன்பும், அநுதாபமும் அவர்கள்மேல் உண்டாக, அவர்களைநோக்கிச் சொல்லுவார்: "நமஸ்காரம். மிகவும் இளைத்துவிட்டீர்கள்போலும். எங்கள்பாடும் அப்படித்தான். சர்வவல்லபதேவன் நல்லவர். அவரே எங்களை வழிநடத்திவருகின்றுர்." கிழவனுரின் இம்மொழிகளைக் கேட்டதே முன்சென்றபெரியவர் இன்புற்றவராய்ப் புன்னகையரும்ப, "வாரும், உங்களுடன் சேர்ந்துசெல்வது எங்களுக்கும்ஆனந்தமே" என்றுர்.

கிழவனுரும், அப்பெரியாரும் கழுதைகளை நடத்திச் செல்லுகின்றுர்கள். கூனற்சைமனும், அம்மையாரும் கழுதைகள்மேல் உட்கார்ந்தபடியே போகிறுர்கள். அம்மையாருடன் பேசினுலோவெனச் சைமன் ஆசித்தும் சற்றே கூசியவனுய், நெருங்கிச்சென்றதும் அம்மையாரின் அழகியவதனத்தையும், அவ்வதனத்திலே அரும்பிய புன்முறுவலையுங்கண்டு பேசஆரம்பிக்கின்றுன்.

சைமன்:- அம்மா! தாங்கள் குளிரினுல் வருந்துகின்றீர்களா?

அம்மையார்:- சிறுவனே! உனது அன்பிற்கு நன்றி. நீதான் இளைப்புக்கும், களைப்புக்கும் இரையானுய் போலும். எனக்கோ குளிரைப்பற்றிய சிந்தனை இல்லை.

சைமன்:- அம்மா! நான்வருந்துவது களைப்பினுலு மல்ல, இளைப்பினுலுமல்ல. என்னைவருத்தும் அது என் முதுகு, அம்மா; நீங்கள்அம்மா அதனைக் காணவில்லைப்போலும்; தாங்கவியலாத அத்துணைகொடுமையாக அது என்னைவருத்துகிறது; எனது உருவத்தையே கெடுத்து — அருவருப்பைக் கொடுத்து நகைப்புக்கிடமாக்குகிறது; கூனற்சைமன்என்றே யாவரும் என்னை அழைப்பார்கள்; எனது நல்லபாட்டனுர் தான்போகுமிடமெல்லாம் என்னையும் உடன்கொண்டு செல்லுகின்றுர்; அன்றியும், எனதுபாட்டனுர் எனக்கு அடிக்கடி ஊட்டிவரும் நன்மதி இது: "சிறுவனே! முறுமுறுதே; எங்கள் ஆண்டவனின் சித்தமெதுவோ— அது நடந்தேதீரும்; வாக்குப்பண்ணப்பட்ட மெசியாவினது வருகையின் காலம் அண்மிவிட்டது; சிறுவனுகிய உனது கூனல்முதுகினையும் சிலவேளை அவரே சொஸ்தமாக்குவார்" என்று இவ்வாறு அடிக்கடி ஆறுதல்மொழிகள் கூறித் தேறுதல்அளிப்பார். "அம்மா! வாக்குப்பண்ணப்பட்ட மெசியா விரைவில் வருவாரென்று நீங்களும் எதிர்பார்க்கின்றீர்களா? எங்கள் துன்பவருத்தங்களைத் தீர்க்கும் இன்பஅவுடதங்களையெல்லாம் மெசியாவாகிய அவர் கொண்டுவருவார்; எங்களுக்குத் தருவாரென்று நான் திடமாகவே நம்புகிறேன்; அவர்விரைவில் எழுந்தருளிவாவேண்டும்என்பதே எனது பிரார்த்தனைஎன்றதும், மிகுந்த அன்புடனும் அநுதாபத்துடனும் அந்தஅம்மையார் கழுதைமேல் வந்த அச்சிறுவனின் கூனல்முதுகினை நோக்குகின்றுர். அவனது ஆழ்ந்தவிசுவாசத்தையும், அயராதநம்பிக்கையையும் அறிந்து ஆச்சரியமுற்றவராய்ப் புன்முறுவல்பூத்துக் கூறத்தொடங்குகிறுர்.

(தொடரும்)

# நானா சங்கதிகள்

—அர்ச். ஜோண்பொஸ்கோவைத் தொடர்ந்து சலேசியன் சபையாரின் அதிசிரேஷ்டராகவந்த ஆசா. மிக்கேல் றுவா சுவாமியாருக்கு முத்திப்பேறு பட்டம் சூட்டுவதற்கான விசாரணை பற்றித் திருச்சடங்காசார திருச்சங்கம் ஆராய்ச்சிநடத்திவருவதாக ரோமாபுரியிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

—பிரித்தானிய பிரதமரான திரு. வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்கள் இங்கிலாந்திலே வெஸ்றர்ஹாமில் பேசியபோது, "யுத்தம் ஒன்று வருகின்றதென்று நான் நினைக்கவில்லை; ஆயின் என்ன நேர்ந்தபோதிலும் கம்யூனிஸ்த கொடுங்கோன்மையையும், ஆக்கிரமிப்பையும எதிர்த்துநின்று சுதந்திரஉலகைப் பாதுகாப்பதில் நமது முழுப்பல முங்கொண்டு நிற்போம்" எனக்கூறலாயினர்.

—யப்பானிய அரசாங்கம் முதல் முறையாகக் கத்தோலிக்க சமயசம்பந்தமான தபால்முத்திரை ஒன்றைப் பாவனைக்கு விடுத்திருக்கிறது. இதிலே நாகாசக்கிநகரிலுள்ள கத்தோலிக்க கோவிலின் பிரதிமை பதிக்கப்பட்டுள்ளது. யப்பானிய வேதசாட்சிகள் போரால்கட்டப்பட்டுள்ள இக்கோவிலே அந்நகரின் மேற்றிராசனக்கோவிலாகவும் தற்போது இருந்து வருகிறது.

—பரிசுத்த பாப்பரசர் காஸ்ரெல் காண்டல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகையில் நாலரைமாதம் தங்கியிருந்தபின் சமீபத்திலே வத்திக்கானுக்குத் திரும்பியிருக்கிறுர். தற்போது 75 வயசுடையவரான அவர் இப்போது அராபியபாஷையைக் கற்கத்தொடங்கியிருக்கிறுரெனச் சென்னை "மெயில்" பத்திரிகையில் ஓர் செய்தி வெளிவந்துள்ளது.

—இப்போது 136 வருடங்களைக் கண்டுள்ள—அதாவது இற்றைக்கு 136 வருடங்களின்முன் ஸ்தாபிக்கப்பெற்ற அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமார் தற்போது 50 பாஷைகளிலே சுவிசேஷதொண்டு நடத்திவருவதாக டபிளின் நகரிலுள்ள அர்ச். அந்திரேயின்கோவில் விசாரணைக்குரவர் வண. ஜே. றொபின்சன் சுவாமியார் கூறுகின்றுர்.

— ஸ்பானிய தேசத்தைச் சேர்ந்தவராய்ச் சென்ற 1950-ம்ஆண்டின் பரிசுத்த வருடத்திலே அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றவரான அர்ச். அந்தோனி மேரி கிளாறெற் அவர்களின் ஞாபகார்த்தமாக ஸ்பானிய அரசாங்கம் ஓர் தபால் முத்திரையைப் பாவனைக்கு விடுத்திருக்கிறது. இவ்விதம் தபால்முத்திரைகள் கொண்டு ஞாபகப்படுத்தப்பெற்ற ஸ்பானியதேச நான்காவது அர்ச்சியசிஷ்டர் இவராவர்.

— ருஷியா அடிப்படுத்தியுள்ள மேற்கு ஊக்றெயின் நாட்டில் இருந்து வந்த 3,000 கத்தோலிக்க குருமாரில் 2,000 பேர் கொல்லப்பட்டும், நாட்டிலிருந்து ஓடித்தப்பியும் விட்டனரென்றும், மீதியான 1,000 பேரும் அங்கு முகமறைவாகத் தங்கியிருக்கின்றனரென்றும், இரு ஊக்றெனிய குருமார் நியூயோக் நகரிலே சமீபத்தில் பத்திரிகைகாரர் மகாநாடொன்றில் அறிவித்திருக்கின்றனர்.

— பரிசுத்த ஸ்தானத்தினிடமாக எகிப்திய முதலாவது ஸ்தானிகராய் இருந்து வந்த ஜனுப் அல் ஏமாறிலே அவர்கள் வயது எல்லைவந்து இளைப்பாறியமையாலே, இவரிடமாக முன்னர் பெல்ஜியத்திலே எகிப்தியஸ்தானிகராய் இருந்தவரான ஜனுப் ஆமெத் றுசிட்வே அவர்கள் வத்திக்கானிடமாக அதன் புதிய ஸ்தானிகராக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றுர்.

— 1931-ம் ஆண்டுக்குப்பின் அதாவது இருபது வருடங்களுக்குப் பின்பு முதன்முறையாக ஜேர்மனிய பிரதம மந்திரியார் ஒருவர் லண்டன் நகருக்குச் சமீபத்திலே விஜயஞ்செய்து திரும்பியிருக்கின்றுர். இவர் மேற்கு ஜேர்மன் சமஷ்டி அரசாங்கத்தின் பிரதமரும், ஓர் சிறந்த கத்தோலிக்கருமான டக்றர் கொன்றுட் அடெனேவர் அவர்களே.

— முத். பத்தாம் பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டுவிப்பதற்கான விசாரணையைத் தொடக்கும் விஷயமாய்த் திருச்சடங்காசார திருச்சங்கம் கலந்து ஆலோசித்திருக்கிறது. இந்த விசாரணையைத் தொடக்குமாறு பரிசுத்த பிதாவைக்கேட்டுத் திருச்சபை அதிபர்களிடமிருந்து—விசேஷமாய் இத்தாலிய திருச்சபை அதிபர்களிடமிருந்து மேலும் கிடைத்தமனுக்களை 'ஒசேர்வாத்தோனே றோமானோ' எனும் வத்திக்கான் தினவர்த்தமானி பிரசுரஞ் செய்திருக்கிறது.

—றெயில்வேஎஞ்சினின் சிற்றறையிலேயே அதன்சொந்தத்தேவைக்கான மின்சாரகறென்ரை உற்பத்திசெய்யக்கூடிய புதியமுறைஒன்றைப் பிரான்சிய றெயில்வேஅதிகாரிகள் சித்திகரமாகப் பரிசோதனைநடத்தியிருப்பதாகப் பரீஸ் நகரத்திலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. பிரித்தானியறெயில்வேய்களும் இப்புதியமுறையை ஆராய்ச்சிசெய்து வருகின்றன.

—பிரித்தானியிலே மின்சார றெயிலை ஓடவைப்பதற்காகப் பாதை நீளம் ஒவ்வோர்பத்துமைலுக்கும், மின்சார கறென்ரஏற்றும் நிலையங்கள் இதுவரை வேண்டியிருந்தன. ஆனல், அதற்குப்பதில் இப்போது ஒவ்வோர் அறுபதுமைல்தூரத்துக்கும் ஒரேயொருமின்சாரக் கறென்றஏற்றும் நிலையமே போதியதாகக்கூடிய புதிய முறைஒன்று கண்டறியப்பட்டிருக்கிறது.

—இந்தியஅப்போஸ்தலரான அர்ச். பிரான்சிஸ் சவேரியார் பாமபதம் அடைந்த நான்காம்நூற்றுண்டுவிழா ஞாபகார்த்தமாகக் கோவைநகரில் இருந்துவருகின்ற அவரின் அழியாத் திருமேனியை இவ்வருடம் காட்சிக்கு வைப்பதற்குத் தேவையான பணத்தைப் போர்த்துக்கால்அரசாங்கம் ஏலவேஅனுமதித்திருக்கிறது.

—பரிசுத்தபாப்பரசர் சென்றகிறிஸ்மஸ்தினத்தை ஏகாந்தத்திலேகழித்துத் தமது குடும்பத்தவர்களுக்கல்லாது வேறெவருக்கும் பேட்டியளிக்கவில்லை. அன்று அவருடைய சகோதரர்-சகோதரிகளின்பிள்ளைகளுக்கென்று இறப்பாயேலின்மேன்மாடியிலே ஓர்கிறிஸ்மஸ் மரம் சித்தஞ்செய்யப் பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### நாவைத்துண்டித்தனர்

தம்மை வாதிக்கப்போவதாகப் பயமுறுத்திய கம்யூனிஸ்தர்களுக்குச் சீனக்கத்தோலிக்கரின் நாமங்களை வெளியிடாவண்ணம் வண. அல்பியோ எமால்டி எனும் கத்தோலிக்க மிஷனரிய குருவானவர் ஓர் றேஸர் பிளேட் கொண்டு தமது நாவையே துண்டித்துவிடலாயினர். இவர் இத்தாலியிலே மிலான் நகருக்குச் சமீபமான டெசியோவின் பிறதேச மிஷன்கள் ஸ்தாபனத்தைச்சேர்ந்தவர். சியென்சின் நகர் ஆஸ்பத்திரியின் ஞானவிசாரணைக் குருவராயிருந்த இவர் அந்தச்சீனக் கத்தோலிக்கரின் நாமங்களை வெளியிடுமாறு கொடுபட்ட மூன்று நிமிஷத் தவணையிலும் தமது நாவை இருமுறை துண்டித்துவிட்டார். அதனால் இவர் நாவிலிருந்து இரத்தம்விடாது பெருகத் தொடங்கவே கம்யூனிஸ்தர்கள் இவரை ஆஸ்பத்திரிக்கு உடனே அனுப்பிவைக்க வேண்டிவந்தது. பிந்த இவரைச் சீனவுக்கு வெளியே துரத்திவிடவேண்டுமென்று கட்டளைபிறப்பித்தார்கள். இவர் அங்கிருந்து திரும்பவும் மிலான் நகர்சேர்ந்து அங்கே சுகப்பட்டுவருகின்றார். 25 வருடங்களுக்குமுன் சீனவுக்குச் சென்றிருந்த இவர் தமதுபேசும் வன்மையைத் திரும்பவும்பூரணமாக அடைந்துகொள்ள மாட்டாரென்று மிலான்நகர டக்றர்மார் கூறுகின்றார்கள்.

### கத்தோலிக்க சினிமாக்கள்

உள்ளபடி எல்லோருமே விரும்பிப் பார்க்கத்தகுந்த கத்தோலிக்க சினிமாப்படங்களைப் பரப்புவதிலே போர்த்துக்கேய அரசாங்கம் ஈடுபட்டுவருகிறது. அது சென்றவருடம் கோவையிலே காண்பித்த போர்த்துக்காலின் இராக்கினியான அர்ச். எலிசபேத் அம்மாளின் சினிமாப்படம் மிக்கபிரஸ்தாபம் அடையலாயிற்று. தற்போதோ லிஸ்பன்நகரில் பிறந்தவரும், பாதுவாநகரில் மரணமடைந்தவருமான அற்புதவரத்தராம் அர்ச். அந்தோனியாரின் புதிய சினிமாப்படத்தைக் காண்பிக்கத் தொடங்கியிருக்கிறது. இதனைக் கண்ணுற்ற கத்தோலிக்கர் அல்லாதவருமே அர்ச். அந்தோனியாரின் சீவியசரித்திரத்தை வாசிப்பதிலே பெரிதும் ஆர்வம்காண்பித்து வருகின்றார்கள்.

### அமெரிக்க முதல் ஸ்தானிகர்

புறொட்டஸ்தாந்தரும், யூதர்களும் பலமாகஆட்சேபித்து எதிர்பேசியபோதிலும், தமது திட்டத்தை அவர்கைவிட்டுவிடுவாரென அநேகர் நம்பியபோதிலும் அமெரிக்க ட்றூமன் ஜனாதிபதிஅவர்கள் நிகழும் தைமாசத்திலே அமெரிக்க பாராளுமன்றம் கூடியதும் வத்திக்கானிடமாய் அமெரிக்க ஐக்கியதேசத்தின் முதல்ஸ்தானிகராக ஜெனறல் மார்க் கிளார்க் அவர்களைத் தெரிவுசெய்யப்போவதாக அறிவித்திருக்கின்றார். இதுவிஷயமாய்ச் செனற்சபையின் அங்கீகாரம் பெறப்படும். வத்திக்கானிடமாக அமெரிக்க ஸ்தானிகர் ஒருவரைத் தெரிவுசெய்வதன் சம்பந்தமாய் திரு. ட்றூமன் ஜனாதிபதி புறொட்டஸ்தாந்தர்களையும், சரித்திரபூர்வமான அமெரிக்கபாரம்பரியங்களையும் காட்டிக்கொடுத்து விட்டாரென்று சர்வதேச புறொட்டஸ்தாந்த கிறிஸ்தசபைகளின் தலைவரான டக்றர் காள் மைக்கின்ரையர் கூச்சலிட்டிருக்கின்றார்.

### மனந்திரும்பிய எழுத்தாளர்

கீர்த்திவாய்ந்த ஆங்கிலேய இலக்கிய எழுத்தாளர் குடும்பத்தைச்சேர்ந்த செல்வி எலியேனர் பார்ஜியன் எனும் மாது மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கின்றாள். இவள் தனது எழுத்து விஷயமாகப் பலதுறைகளிலும் பெரிதும் அனுகூலம் அடைந்துள்ளவளாயினும் அதிகமாகப் பிள்ளைகளின் எழுத்தாளினனச் சிறப்பாக அறியப்படுகின்றாள். இவள் ஓர் கவியும், நாடகாசிரியையும் ஆவள். இவள் தந்தையாரான திரு. பி. எல். பார்ஜியன் அவர்கள் விக்ரோறியா இராணியாரின் காலத்திலே பேர்பெற்ற ஓர் பத்திரிகாசிரியரும், பேரான நாடகபாத்திரமான ஈர்விங் அவர்களின்பெரிய நண்பருமாவர்.

### சற்பிரசாத மகாநாட்டுக்கீதம்

பார்சலோனநகரிலேவருகிற வைகாசிமாதம் ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்குரிய அதிகார பூர்வமான கீதத்தை ஓர் ஸ்பானிய கவிஞரான ஜோஸ் மரியா மெபன் அவர்கள் இயற்றியுள்ளனர். மகாநாட்டுக்குச் சமூகமளிக்கவிருக்கின்ற ஆயிரக்கணக்கான குருமார், குருசிரேஷ்டர்களின் பாவனைக்கென்று பூசைஉடுப்புகளும், பாத்திரங்களும்கொடுக்குமாறு அந்நகர் மேற்றிராணியாரான மொட்றேகோ ஆண்டவர் தமது ஞானமக்களைக் கேட்டிருக்கின்றார். மகாநாடு முடிந்ததும் அவைகள் மிஷன் நாடுகளிலும், வறியகோவில்களிலும் உபயோகிக்கப்படுமாறுபரிசுத்த பாப்பரசருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### கன்னிகாஸ்திரியின் பிரவேசம்

நேபாளத்தின் தலைப்பட்டணமாகிய காற்மன்டுநகரிலே நோய்வாய்ப்பட்டிருக்கும் ஸ்தானிகர் ஒருவரைப் பரிகரிப்பதற்கென்று இந்தியாவுக்கும், தீபேத்துக்கும் இடையிலே இமயமலையில் அமைந்து, அந்நியர்எவரும் உட்பிரவேசியாது தடைவிதிக்கப்பட்டுள்ள அந்நாட்டுக்குக் கன்னிகாஸ்திரியான டக்றர் ஒருவர் சமீபத்திலே ஆகாயவிமானம் ஒன்றில் பறந்துசென்றிருக்கின்றார். அந்தஸ்தானிகர் ஓர்நூதன சுரங்கண்டு வருந்துகிறாரெனத் தெரிவித்தும், ஆகாயவிமானத்திலே டக்றரான ஓர் கன்னிகாஸ்திரியை விரைவில் அனுப்பிவைக்க [illegible]

# உயிருள்ள குடில்

அன்று கர்த்தர் பிறப்புக்கு முந்தினநாள். ஆகமனகாலம் முழுவதும் ஆஞ்செலா, ஜெரூட் இருவரும் அந்தப் பெருநாளுக்கு ஆயத்தஞ்செய்தனர். அவர்களின்தந்தை அவர்களுக்கு ஒரு நேர்த்தியான சிறுகுடில்செய்து கொடுத்திருந்தார். தாயார் இரு கம்பளிஆட்டுக்குட்டிகள் செய்துகொடுத்தாள். இரண்டும் சின்னயேசுவுக்குச் சமீபமாய் நின்றுகொண்டிருந்தன. அவைகளைப்பார்த்துப் பாலன் புன்னகை காண்பிப்பதுபோல் இருந்தது. குடில்வேலைமுடிய மணி இரண்டாயிற்று. எஞ்சியநேரத்தை எவ்விதம் செலவழிப்பதெனச் சிறுவர் இருவரும் யோசித்துக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது அவர்களுடைய தகப்பனர் அவசரம்அவசரமாய் அறையினுள் நுழைந்தார். ‘ஆஞ்செலா, ஜெரூட், இதைவிட நல்லகுடில் — உயிருள்ள குடில் ஒன்று பார்க்க விரும்புகிறீர்களா?'' எனக்கேட்டார்.

“உயிருள்ள குடிலா அப்பா?''

“ஆம்''

“தயவுசெய்து அதை எங்களுக்குக் காண்பியுங்கள். முதல் அறையிலா அது இருக்கிறது?''

“இல்லை, அது இந்தவீட்டில் இல்லை. மோட்டர்பஸ் ஏறிச் செல்லவேண்டும், அதைப்பார்க்க வேண்டுமானல்''

சிறுவர்களுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. உடனே ஓடிப்போய்ச் சட்டைகளை மாட்டினர். தந்தையின் இருகரங்களையும் பிடித்துக்கொண்டு புறப்பட்டனர்.

ஏறக்குறையக் கால்மணிநேரம் பஸ்வண்டிக்காகக் காத்துநின்றனர். பஸ்வந்ததும் ஏறிஉட்கார்ந்தனர். குறித்த இடம் போய்ச்சேர்ந்ததும் மூவரும் இறங்கிக் குறுகியதெருக்கள் வழியாக நடந்துபோனர்கள். அதைப்போல் அரோசிகமான இடத்தைச்சிறுவர்கள் இதுவரை பார்த்ததில்லை.

பாழடைந்ததுபோல் வெளியேதோன்றிய ஓர் கட்டடத்தை மூவரும் அடைந்தனர். வெளிக்கதவு திறந்திருந்தது. அதன்வழியாய் நுழைந்து படிகள்வழியாய் ஏறிச்சென்றனர். வெகுகவனத்துடன் சிறுவர் இருவரும் தங்கள்தந்தையைப் பின்தொடர்ந்தனர். அந்தஇடத்தைப்பார்க்க மிகப்பரிதாபமாயிருந்தது. அங்கிருந்த ஓர்அறையின் கதவைத் தட்டாமலே மூவரும் உட்சென்றார்கள்.

அங்கு கண்டகாட்சி சிறுவர் இருவரையும் திடுக்கிடச்செய்தது. ஒருபெண் தரையில்படுத்திருந்தாள். நன்குமூடத் துணி ஒன்றும் கிடையாது. அவள் அருகில் அவளுடைய புருஷன் நின்றுகொண்டிருந்தான். அவன்ஒரு கை இழந்தவன். கவலையுடன் நின்றான். அவர்கள் இருவருக்கும் மத்தியில் புதிதாய்ப்பிறந்த ஒருகுழந்தை. அதுபசியினலும், குளிர்தாங்கமுடியாமலும் விடாது அழுதுகொண்டிருந்தது. அந்தப்பெண்ணும், அம்மனிதனும் அதை அமர்த்த முயன்றனர்.

சற்றுநேரம் இந்தக்காட்சியைப் பார்த்தபின் ஆஞ்செலா தன் தந்தையைப்பார்த்து “அப்பா, இது சின்னயேசுவா?'' எனக் கேட்டாள்.

“ஆம், கண்ணே, நம்வீட்டிலே உன்குடிலில் இருக்கும் யேசு வெறும்சுரூபமே. இந்தயேசு உயிருடனிருக்கிறார்.''

“யேசுவின் அப்பாவும், அம்மாவுமா இவர்கள் இருவரும்?'' என ஜெரூட் வினவினன்.

“ஆம்''

“அவர்கள் ரொம்ப ஏழைகளா?'' என ஜெரூட் திரும்பவும் கேட்டான்.

“ஆம், பரமஏழைகள். அவர்கள்கையில் காசுஒன்றும் இல்லை. கர்த்தர்பிறந்த திருநாளன்று சாப்பிடமுதலாய் ஒன்றும்கிடையாது.''

அன்று குளிர் அதிகம். நெருப்பு எரியவேண்டிய இடத்தைச் சிறுவர்கள் நோக்கினர்கள். விறகும் இல்லை, நெருப்பும் இல்லை. அப்பொழுதுதான் அந்தக்குடும்பத்தின் நிலையை அவர்கள் உணர ஆரம்பித்தனர். தங்களை அறியாமலே சட்டைப்பைக்குள் கைவிட்டனர். அங்கு காசு இல்லை. பெற்றோர்கொடுத்த பணத்தையெல்லாம் கிறிஸ்மஸ் சாமான்களும், பட்டாஸ்களும் வாங்குவதில் செவழித்து விட்டார்கள்.

இதை நினைத்துநினைத்து அவர்கள் மனம்வாடினர். இடையர்கள் யேசுவைப்பார்க்கச் சென்றபோது, வெறுங்கையுடன் போகவில்லை. காணிக்கைகளுடன் சென்றார்கள். இங்கோ, இந்தஏழைகளுக்குக் கொடுக்க அவர்களிடம் ஒன்றுமில்லை. கண்ணீர் வடித்தார்கள். “அப்பா, அவர்களுக்குப் பணம் கொடுங்கள். எங்களுக்குக் கர்த்தர் பிறப்பன்றும், வருடப்பிறப்பன்றும் கிடைக்கிற பணத்தையெல்லாம் ஆஞ்செலாவும் நானும் சேர்த்துவைத்து உங்களிடம் கொடுத்துவிடுகிறோம்'' என ஜெரூட் கூறினன்.

இதுதான் அவர்கள் தந்தை எதிர்பார்த்தது. அவர்கள் நல்ல பிள்ளைகள், இளகிய மனதுள்ளவர்கள், பிறர்சிநேகமுள்ளவர்கள் என அவர் அறிவார். எனினும் உலகில் ஏழைகள் படும்பாடுகளை அவர்கள்நேரில் அறியவேண்டும், தாராளகுணத்துடன் உதவிசெய்ய வேண்டும் என அவர் ஆசித்தார்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

---

பற்னநகரிலுள்ள பிலடெல்பியாவின் வைத்தியமிஷன் கன்னிகாஸ்திரிமாருக்கு அதன் தலைநகரிலிருந்து ஓர் தந்திச்செய்தி அனுப்பிவைக்கப்படலாயிற்று. ஓர்நூற்றாண்டுக்குமேல் நேபாளநாட்டிற் கால்வைக்க அந்நியர்கள்எவரும் அனுமதிக்கப்பட்டிலர். இதுவரை கன்னிகாஸ்திரி ஒருவர் அதன் எல்லையைக்கடந்து உட்பிரவேசிக்க எப்போதாவது அனுமதிக்கப்படவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1952-ம்ஆண்டுக்கான இலங்கைச் சத்தியவேத பஞ்சாங்கம்**

புத்தக ரூபமானது
விலை பிரதிசதம் 25.
தபாற்செலவு பிரத்தியேகம்.

**Manager**
St. Joseph's Catholic Press,
Jaffna.

## திருநாள் அட்டவணை

**தைமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 18 | அ. இரா. ரோமை. பத்திரா. | (வெ) |
| சனி | 19 | அ. கனுத்தப்பர் | (வெ) |
| ஞா | 20 | கர்த்தர் பிரத்தியட். பின் 2-ம் ஞாயிறு—அ. செபஸ்தியார் | (ப) |
| திங் | 21 | அ. அஞ்ஞேசம்மாள் | (சி) |
| செ | 22 | அ. விஞ்சேந்தியார் | (சி) |
| புத | 23 | அ. இறேமுந்தப்பர் | (வெ) |
| வி | 24 | அ. திமொத்தேயு | (சி) |

சத்தியவேத
# பாதுகாவலன்

1952-ம் ஆண்டு
தைமாதம் 17-ந்திகதி

## சேர்ந்து வாழ்வதே...

இலங்கைப் புதியபாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறும் திகதிபற்றிய அதிகார முறையான அறிக்கை இன்னுமே வெளியிடப்படாதபோதிலும் அரசியற்கட்சிகள்பலவும் அதற்குவேண்டிய ஆயத்தங்களைச்செய்வதிலே தீவிரமாகஈடுபட்டு வருகின்றன. "ஆனை வரும்பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பதுபோல, இதுவிஷயமாயும் "தேர்தல் வரும்பின்னே, பிரசாரம்வரும் முன்னே" யென்று பிரசார வேலைகள் மும்முரமாக நடக்கத் தொடங்கியிருக்கின்றன. தென் பகுதியிலே ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, குடியரசுக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி, சமசமாஜகட்சி, நவசமசமாஜகட்சி, தொழிற் கட்சி ஆதியன ஒன்றையொன்று எதிர்த்து, ஒன்றையொன்று பகைத்து, ஒன்றின்மேல்ஒன்று சொல்லம்புவிடுத்து, எல்லோருமே கலகலகக் கர்ச்சித்து முழங்குவதைக்கவனிக்குமிடத்து அவரவர் தாம்அறிந்த — அனுபவத்தில்கைவந்த அரசியற் தந்திரங்களையெல்லாம் பாக்கியில்லாது இந்தப்பொதுத்தேர்தற் பிரசாரங்களில் பிரயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்களென்றே அனுமானிக்க வேண்டியிருக்கிறது.

அங்ஙனமாக, யாழ்ப்பாணத் தமிழர்கள்மத்தியிலும் பொதுத் தேர்தற்பிரசார மாருதம் வீசத் தொடங்கிவிட்டது. தற்போது இங்கேஒர்பால் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும், மறுபால் தமிழ்அரசுக் கட்சியும் தேர்தற்பிரசாரம் நடத்தத் தொடங்கியிருக்கின்றன. தென்மராட்சிப்பகுதியிலே இது பிரசண்டமாருதம் போல் வீசத்தொடங்கிவிட்டது. இவ்விரு கட்சிகளையும்தவிர, சமதர்மக்கட்சிகளின் தலைவர்களும் இடையிடையேவந்து தலைகாட்டிக் கொண்டுபோகின்றார்கள். அதனால் தமிழ்மக்கள் முன்னர் இரணடொரு தடவைகளிற் போல இனிமேலும் மதிமோசமாக நடவாது, மதியூகமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அது தான் இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, கூடவந்த குரங்கினம் ஆண்டாலென்ன என்றவாறாய் எக்கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் எமக்கென்னவென்று வாளாவிருப்பின் வரக்கூடிய தீமை மிகப்பெரிதாகும். ஆய்ந்தோய்ந்து பாராதான்காரியம் தான் சாந்துயரந்தரும். ஆதலால் எந்தக்கட்சி எதைசசொன்னாலும் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிஆராய்ந்து செய்யத்தக்கதை—தமிழ்மக்களுக்கும், அவர்கள் சாகியத்தாருக்கும் நன்மை பயக்கத் தக்கதைச் செய்வதே தகுதியாகும்.

பொதுத்தேர்தல் நடைபெறும்மாதம் இன்னுமே தெரியவராதபோதிலும் அது வருகிற ஆவணியில்தான் நடந்தேறுமென்று சில அரசியற் கட்சிகள் நம்புகின்றன. சென்ற தேர்தலும் அதே மாதத்தில் தான் நடைபெறலாயிற்று. காரணம், அதற்குவாய்ப்பான மாதமாக அஃது இருப்பதேயாகும். அவ்வாறாயின் இன்னும் ஆறு மாதம்இருக்கின்றது. அதாவது தமிழர்கள் பொதுவாக இலங்கையின் நலன்களையும், சிறப்பாகத் தங்கள்சாகியத்தின் நலன்களையும் உத்தேசித்து எந்தக்கட்சியை ஆதரிக்கவேண்டும்? எந்தக்கட்சிக்குச்சாதகமாய் நடந்து கொள்ள வேண்டும்? என்பதை நன்குஆலோசித்துத் தீர்மானிப்பதற்குப் போதியகாலம் இருக்கின்றது. இன்று ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து உழைக்கின்ற தமிழ்க்காங்கிரஸ் கட்சியைத்தான் ஆதரிப்பது நலமாகுமா? அல்லது ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிப்பது நன்மையாகுமா? அல்லது தமிழர்க்குத் தனியரசு பெற்றுக் கொடுக்கப்போவதாகத் தவில் முழக்கி, குளத்தைக் கலக்கிப் பருந்துக்கிரை கொடுக்கத் தேடும் சமதர்மக்கட்சிகளுடன் கைகோர்த்து நிற்கின்ற தமிழரசுக்கட்சியை ஆதரிப்பது நயமாகுமா?

நிற்க, வடமாகாணத்திலும், கிழ்மாகாணத்திலுமாகத் தமிழ் மக்களுக்குப் பாராளுமன்றத்திலே கிடைக்கக்கூடியனவாய்ப் பதினாறு ஸ்தானங்கள் இருப்பதாக அரசியற் தலைவர்கள் மொழிகின்றனர். "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வே" என்ற உயரிய மொழியைக் கடைப்பிடித்துத் தமிழர்களெல்லாம் ஒன்றுபட்டு நின்று — ஒரே பந்துக்கட்டாய் நின்று—ஒரு பெருங் கட்சியாய் நின்று இந்தப்பதினாறு ஸ்தானங்களுக்கும் ஒரே கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளைத்தெரிவு செய்து அனுப்புவது மதியாகுமா? அன்றேல் இந்தப் பதினாறு ஸ்தானங்களையும் தற்போது இலங்கையிலுள்ள பத்து அரசியற்கட்சிகளும் தம்முள்ளே பங்குபோட்டுவிட்டு — தமிழர்களை ஓர்சிதறுண்டசாகியமாகும்படிவிட்டுப் பார்த்துக்கொண்டிருப்பது மதியாகுமா? இவைகளையெல்லாம் நன்குஆராய்ந்து தமிழ்மக்கள் மதியூகமாக நடந்துகொள்வார்களென நம்புகின்றோம். "சேர்ந்துவாழ்வதே சிறந்தவலிமை" என்பதையும் அனைவரும் ஞாபகத்திற் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

---

### கர்த்தர் பிரத்தியட்சத்தின் பின்
## 2-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு. 2: 1—11)

அக்காலத்தில் கலிலேயாநாட்டிலுள்ள கானாஊரில் ஓர் கலியாணம் நடந்தது. யேசுநாதருடைய தாயாரும் அங்கே இருந்தாள். யேசுநாதரும் அவருடைய சீஷர்களும் அககலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது திராட்ச இரசமில்லாமற்போகவே, யேசுநாதருடைய தாயார் அவரைநோக்கி: அவர்களுக்கு இரசமில்லையேயென்றாள். அதற்கு யேசுநாதர்: ஸ்திரீயே! அதைப்பற்றி எனக்கும் உமக்குமென்ன? என்னுடையநேரம இன்னும் வரவில்லையென்று அவளுக்குத் திருவுளம்பற்றினர். ஆயினும் அவருடைய தாயார் பணிவிடைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு எதெதைச் சொல்லுவாரோ அதைச்செய்யுங்கள் என்றாள். அப்படியிருக்க யூதர்சுத்திகரஞ் செய்யும்முறைமையின்படியே ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்றளவைப் பிடிக்கத்தக்க ஆறுகற்சாடிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. சாடிகளைத் தண்ணீரால் நிரப்புங்கள் என்று யேசுநாதர் அவர்களுக்கு உரைக்க, அவைகளை வாய்மட்டும் நிரப்பினார்கள். பின்னும் யேசுநாதர், இப்போது மொண்டுபந்திவிசாரணைக் காரனிடத்திற் கொண்டு போங்கள் என்று அவர்களுக்குச் சொன்னதும், அவர்களுங் கொண்டுபோனார்கள். ஆனால், அது எங்கே இருந்து வந்ததென்று தண்ணீர் மொண்டபணிவிடைக்காரர் அறிந்திருந்தார்களேயன்றி. பந்திவிசாரணைக்காரன் அறியாதிருந்தமையால் அவன் திராட்சஇரசமாய் மாறின தண்ணீரைச் சுவைபார்த்தமாத்திரத்தில் மணவாளனை வரவழைத்து, அவனை நோக்கி: எம்மனிதனும் முந்த நல்லதிராட்ச இரசத்தைப் பரிமாறுகிறான். சனங்கள் திருப்தியாகப் பானஞ்செய்த பிறகு கீழ்த்தரமானதைப் பரிமாறுகிறான். நீரோ நல்லதிராட்ச இரசத்தை இதுவரைக்கும் நிறுத்தி வைத்திரென்றான். தம்முடைய அற்புதங்களில் முதல் அற்புதமாகிய இதனை யேசுநாதர் கலிலேயா நாட்டிலுள்ள கானாஊரில்செய்து தமது மகிமையை வெளிப்படுத்தினர். அவருடையசீஷர்கள் அவர்பேரில் விசுவாசங்கொண்டார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணப் புதியமேயர்

யாழ்ப்பாணநகரின் முதல்மேயரான பிரபலவழக்கறிஞர் திரு. சாம் ஏ. சபாபதி அவர்கள்சென்ற 11-ந் திகதி நடைபெற்றதேர்தலிலேமீண்டும் மேயராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். இத்தேர்தல்சம்பந்தமாக அன்றுமாலை நடைபெற்ற யாழ்ப்பாண நகரசபைக்கூட்டத்தில் 15 அங்கத்தவர்களும சமுகமாயிருந்தார்கள். மேயர்பதவிக்குத் திரு. சாம் சபாபதி அவர்களின்பெயரைத் திரு. ஏ. ஜே. சுவாம்பிள்ளை பிரேரேபித்தனர். இதனைத் திரு. டி. எஸ். துரைராஜா அனுவதித்தனர். பின்னர் உபமேயர்பதவிக்குத் திரு. அல்பிறெட் ரி. துரையப்பா அவர்கள் தெரிவுசெய்யப்பெற்றார். அதன்மேல்புதியமேயர், தமதுஆசனத்தில் அமர்ந்து அங்கத்தவர்களுக்கு நன்றி தெரிவித்தபோது பின்வருமாறு கூறினர்:- "பல அரசியல கட்சிகளையும் சேர்ந்த அங்கத்தினர்கள் அனைவரும் என்மீது நம்பிக்கைவைத்து என்னைத் தெரிவுசெய்ததற்காக நன்றி செலுத்துகிறேன். நான் நகரசபைத் தேர்தலிலே எனது வட்டாரத்தில் சுயேச்சை அபேட்சகராகநின்று போட்டியிட்டுவெற்றிபெற்றேன். அதேபோல் ஓர்சுயேச்சைவாதியாகவே நான் இந்த மேயர் ஆசனத்தில் அமர்கிறேன். இச்சபையின் அலுவல்களில் கட்சிவித்தியாசங்கள் குறுக்கிடும்படி அனுமதிக்கப்படாதிருக்குமென நான் நிச்சயமாக நம்புகிறேன். சபையின் நிதிநிலைமை எவ்வாறு இருக்கிறதென்பது எனக்குத்தெரியாது. ஆனல், இந்நகரிலுள்ள வரி செலுத்துவோரின் சேமாபிவிருத்திக்கும், நலன்களின் அபிவிருத்திக்குமாக நாம் வாக்குறுதி அளித்தபடி நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும்."

### பிரதமரின் விஜயம்

பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் இம்மாதம 26-ந்திகதி சனிக்கிழமை சாவகச்சேரித் தொகுதிக்கு விஜயஞ்செய்து தென்மராட்சி அரசினர் பெண்பாடசாலையையும், கைதடி அரசினர் மத்தியவைத்தியசாலையையும் திறந்துவைப்பாரென்றும், கைதடிப் புதியவயோதிகர்சாலைக்கு அஸ்திபாரக்கல் நாட்டுவாரென்றும் சாவகச்சேரிப்பிரதிநிதி அறிவிக்கின்றார்.

### ஜேர்மன் சீமெந்து

40,640 மூடை ஜேர்மன் சீமெந்து ஏற்றிவந்த எஸ். எஸ். இந்தியா ஹோம் போட்டர் எனும் கப்பல் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து மண்டைதீவுக்கப்பால் ஆழ்கடலிலே நங்கூரமிட்டு நிற்கின்றது. இந்தச் சீமெந்து மூடைகளை ஏற்றிவந்து யாழ்ப்பாணத் துறைமுகத்திலே இறக்குவதில் அநேகதோணிகள் ஈடுபட்டிருக்கின்றன.

### கொழும்புநகரின் புதியமேயர்

கொழும்புநகரின் புதியமேயர் தெரிவு சென்ற வியாழக்கிழமை நடைபெற்றது. அப்பதவிக்கு அபேட்சகர்களாக முற்பட்டுநின்ற இருவரிலும் திரு. சி. ரி. கிறேரோ அவர்களுக்குப் 16 சம்மதிச்சீட்டுகளும், சென்றவருடம் அதன் மேயராகவிருந்த திரு. எஸ். செல்லமுத்து அவர்களுக்குப் 13 சம்மதிச்சீட்டுகளும் கிடைத்தன. அதனால் திரு. சி. ரி. கிறேரோ அவர்களே இவ்வருடம் சரித்திரப்பிரசித்தி பெறவிருக்கும் கொழும்புநகரின் புதியமேயராகத் தெரியப்படலாயினர். வெற்றிபெற்றவரும், தோல்வியுற்றவருமாகிய இருவரும் ஐக்கியதேசியக் கட்சியைச்சேர்ந்தவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**********************

## சந்தாதாரருக்கு ஓர் வேண்டுகோள்

"சத்தியவேதபாதுகாவலன்" சந்தாதாரருக்கு 1951-ம் ஆண்டு முடிகிறவரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னுமேகவலியாமல் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப்பணததைத் தாமதமில்லாது அனுப்பிவைக்குப்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். 1952-ம் ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த பங்குனிமாதம் 31-ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரும் கேட்கப்படுகின்றார்கள். பணம் அனுப்பும்போது தங்கள் சந்தா நம்பரையும் குறித்து அனுப்புக.

**********************

## எமது பாத்திமா யாத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்து அவவை இன்னும் திருப்திப்படுத்தாமையால் அது இன்னமும் அனுபவிக்க வேண்டிய சில துன்பம் இருக்கின்றதென்று மாதாவின் காட்சிபெற்ற மூன்று பிள்ளைகளிலும் தற்போது சீவனோடிருக்கும் லூசியா நம்புவதாலேதான் அவள் கவலை கொண்டிருப்பதாகக் கார்மேல் கன்னிகாசபையிலே கன்னியாஸ்திரியாக இருக்கும் ஓர்பெண்மணி தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

### களவில்வந்த சாமான்கள்

இந்தியாவிலிருந்து ஒருவள்ளத்திலே களவாகக் கொண்டுவரப்பட்டதெனக் கருதப்படும் 167 ருத்தல் அபின், 3 அந்தர் பாதரசம், 12 டசின் வாசனைத்திரவிய போத்தல்கள், மற்றும் ஏராளமான கஸ்தூரிஆதியவைகளைச் சென்றவாரம் வடபகுதித் துறைமுகத் தடைஅதிகாரியான திரு. ஈ. அலுவிகாரையும், இருகாவலாளிகளும் வல்வெட்டித்துறைக்குச் சமீபமான பொலிகண்டியிலே கைப்பற்றியிருக்கின்றனர். இவற்றின் பெறுமதி ஆறுலட்சம் ரூபாவரையிலாகும். இதற்குமுன் இவ்வளவுபெறுமதியான களவுசாமான்களும், இவ்வளவு பெருந்தொகையான அபினும் கைப்பற்றப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. இப்போது கள்ளமாக்கெற்றில் அபின் ஒரு ருத்தல் 800 ரூபாவீதம் விலைப்படுகின்றதாம்.

### ஒருவருக்கு அம்மைநோய்

யாழ்ப்பாணப் பட்டணத்திலே நல்லூர்ப்பகுதியில் ஒருவருக்கு அம்மைநோய் உண்டாயிருக்கக் கண்டறியப்பட்டதிலிருந்து அப்பகுதியில் வசிப்பாருக்கெல்லாம் அம்மைப்பால் குற்றப்படுகிறது. அம்மைநோய் கணடவர் பருத்தித்துறையிலிருந்துவந்த ஓர் வியாபாரியாவர். அவருடன் புழங்கிய 30 பேர் நல்லூரிலுள்ள இருவீடுகளில் தனிமையாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### அம்மைநோய் கண்டவர்கள்

ஊர்காவற்றுறைத் தொற்றுநோய் ஆஸ்பத்திரியிலே அம்மைநோய்கண்ட ஒன்பது நோயாளிகள்வைத்துப் பாராமரிக்கப்படுகிறார்கள். இவர்களெல்லாம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். அங்கு இவர்களைக் கொண்டுவந்ததையிட்டுப் பொதுசனங்கள் வெறுப்புக் காண்பிக்கின்றார்கள். இதற்குக் காரணம் தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்குச் சமீபமாகச் சனங்கள்வசிப்பதேயாகும்.

## உயிருள்ள குடில்

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

இரண்டு மாதங்களுக்குப் போதுமான உணவும், உடைகளும். வசதிப்பொருட்களும் வாங்கக்கூடிய பெரியதொகையைச் சிறுவரின்தந்தை அந்த ஏழைகளிடம்கொடுத்தார். ஆஞ்செலாவும், ஜெருட்டும் மாறிமாறி அச்சிறுகுழந்தையைத் தூக்கியெடுத்துப் பத்தியுடன் முத்தமிட்டார்கள். புருஷனுக்குச் சீக்கிரம் வேலைதேடிக் கொடுப்பதாகத் தந்தை கூறியதும் மூவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டனர். வழியில் சிறுவர்களால் பேசமுடியவில்லை. "பிள்ளைகளே, ஏழைகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் யேசுவையே பார்ப்பதாக நீங்கள் கருதவேண்டும். ஏழைகளுக்கு நீங்கள் ஏதாவது கொடுத்தாலும், செய்தாலும் யேசுவுக்கேகொடுக்கிறீர்கள்; அவருக்கே செய்கிறீர்கள்" என அவர்களின் தகப்பனர் கூறினர்.

(ச. ஞா. தூ.)

## தவறை ஒப்புக்கொண்டால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுடையவன். காரணம், அவனுக்குச் சிறுவயதிலேயே, இவர்களைக்கண்டவுடன் வெறுப்பு உண்டாயிற்றும். அதற்காகவேண்டி, ஏதேதோ பொய்க்காரணங்களைக்கூறினேன். இந்தச்சமயத்தில் உதவிக்கு வந்தது எது தெரியுமா? ஆம், அவர் கனவிலும் நினைத்திராத கிறிஸ்துவஸ்தாபனந்தான். கிறிஸ்துவஸ்தாபனத்திற்குக் கொள்கைதான் பெரிது. இதற்காக அது ஆயிரக்கணக்கான வேதசாட்சிகளைப் பலிகொடுத்திருக்கிறது. இன்று ஒருகொள்கை, நாளையொன்று அல்ல. கொள்கைக்காகவே வாழ்ந்திருக்கிறது. அநேக நல்ல கிறிஸ்துவர்களுடைய இரத்தத்தின்மேல் கட்டப்பட்டது கிறிஸ்துமதம். இது மறுக்க முடியாத சரித்திரம் கண்ட உண்மை.

கிறிஸ்தவர்களையும், கிறிஸ்துவையும் அன்றுதான் அவர் நினைத்தார். அவர்களைப்பற்றித்தான் அலட்சியமாக விருந்ததையும், கவலைகொள்ளாமல் இருந்த தவறையும் அன்றேதான் உணர்ந்தார். "கிறிஸ்துவஸ்தாபனம்தான் ஹிற்லருடையஆர்ப்பாட்டத்தையும், உண்மையை அடக்கும் அட்டகாசத்தையும் எதிர்த்துநின்றது. இதற்குமுதல் நான் கிறிஸ்து மதத்தைப்பற்றியும், அவர்கள் கோவிலைப்பற்றியும் ஒருவித ஆர்வமும் கொண்டிருக்கவில்லை. ஆனல், இப்போது நான் அவைகளை மிகவும் நேசிக்கிறேன். மிகவும் புகழ்கிறேன். ஏனென்றால், அவைகள்தான் ஆழ்ந்தஅறிவிற்கும், ஒழுக்கத்தின் சுதந்தரத்திற்கும் ஊன்றுகோலாக நிற்கின்றன. ஆகையால், நான் அதை அளவுகடந்துபுகழ்கிறேன். நான் அவைகளை வெறுத்ததற்காகப் பச்சாத்தாபப்படுகிறேன்" என்றார்.

(தொடரும்)

# திருமண விஞ்ஞாபனம்

## வில்லியம்ஸ்—பஸ்ரியாம்பிள்ளை

கோலாலம்பூர், மலாய றெயில்வேயின்
இளைப்பாறிய பென்ஷனர் திரு. எம். பஸ்ரியாம்பிள்ளை அவர்கள்
தமது சிரேஷ்ட புத்திரி

**திருவளர்செல்வி எமிலி றோஸாக்கும்**

ஈப்போவிலே
அரசாங்க வைத்திய-சுகாதார காரியாலயத்தில்
கடமைபார்க்கும் திரு. எம். ஈ. பாலசிங்கம் தம்பதிகள்
தமது இளையசகோதரரும்,
கோலாலம்பூரிலே மத்திய மின்சாரசபையின்
பிரதம கட்டுவேலை இஞ்சினியர் காரியாலயத்தில்
கடமைபார்க்கிறவரும், எவ். எம். எஸ். றெயில்வேயின்
இளைப்பாறிய பென்ஷனராயிருந்து காலஞ்சென்ற
திரு. வி ரி. வில்லியம்ஸ் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரருமான

**திருவளர்செல்வன் எம். ஈ. சுகுணசிங்கத்துக்கும்**

கோலாலம்பூரிலே செந்துல் பசாரிலுள்ள அர்ச். சூசையப்பர் கோவிலில் நிகழும் 1952-ம் ஆண்டு தைமாதம் 28-ந் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடக்கும் திருமண வைபவத்தின் போதும், பின்னர் கோலாலம்பூரிலே செந்துல்வீதியிலுள்ள 4-ம் நம்பர்கிருகத்தில் நடந்தேறும் வரவேற்பு உபசாரத்தின்போதும் சமூகமளிக்கும்படி சுற்றமித்திரர்களைப் பரிவாகக கேட்டுக் கொள்ளுகின்றார்கள்.

No. 4, செந்துல்வீதி, செந்துல்
கோலாலம்பூர்.

797, நியூஏறியா வீதி, செந்துல்பசார்,
கோலாலம்பூர்.

### தலைமை ஆசிரியருக்கு அறிவித்தல்

#### பாடசாலைத் தவணைகள்

1952-ம் ஆண்டு எல்லாக் கத். பாடசாலைகளிலும் அனுசரிக்கப் படவேண்டிய பாடசாலைத்தவணைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன:

1-ந் தவணை: 8-1-52—8-4-52
2-ந் தவணை: 5-5-52—8-8-52
3-ந் தவணை: 25-8-52—5-12-52

தை 11, 14, மாசி 4, வைகாசி 9, ஆனி 24, ஆடி 7, புரட்டாசி 1, 22, ஐப்பசி 17, மார்கழி 1, 2 இவை பகிரங்க விடுமுறைநாட்கள். ஆதலால் அத்தேதிகளிற் பாடசாலை நடைபெறக் கூடாது.

வைகாசி 12, 22, ஐப்பசி 13—16 இவை எல்லாப்பாடசாலைகளுக்கும் விடுமுறை காலமாகும்.

1952-ம் ஆண்டில் தத்தம் பாடசாலைகளில் அனுசரிக்கப்படவிருக்கும் அத்தியாவசியமான விசேஷ விடுதலை நாட்களிருப்பின் அவற்றைக்குறித்துக் காலதாமதமில்லாது கட்டளைச் சுவாமியாரின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கும்படி தலைமை ஆசிரியர் எல்லோரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**விசேஷகவனிப்பு:**

1. அவசிய காரணமாகப் பாடசாலை மூடுவதைப்பற்றி நமக்கு அனுப்புங் கடிதங்கள் கட்டளைச் சுவாமியாரின் அங்கிகாரம் பெற்று அவரூடாக அனுப்பப்படவேண்டும்.
2. பிள்ளைகளின் வரவு குறைவு என்ற காரணத்தையொட்டிப் பாடசாலை மூடக்கூடாது.

**T. A. J. Mathuranayagam**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 9-1-51.

நத்தார், புதுவருடச் சோபனம் அனுப்பிய ஆசிரியர் எல்லோருக்கும் யாழ்ப்பாணம் கத்தோலிக்க பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் தம் நன்றியைத் தெரிவித்து புதுவருட ஆசியும் கூறுகிறார்.

### Notice to Parish Priests and Teachers

**Teachers who secure New Appointments as Teachers in Assisted Schools on or after 1st June 1951**

The Treasury has decided that teachers who secure new appointments as teachers in Assisted Schools on or after 1st June, 1951, should be allowed leave conditions applicable to new entrant teachers to the Public Service.

2. The leave to which teachers who secure new appointments as teachers in Assisted Schools on or after 1st June, 1951, are entitled will accordingly be as follows:—

**Casual leave**—Where leave is required owing to private reasons of the gravest urgency, casual leave on full-pay may, at the discretion of the Manager, be allowed for periods of not more than five days at a time up to a maximum of **seven days** in the school year.

**Sick leave**—In cases of serious illness during term time necessitating leave beyond the period provided for above, where the Director is satisfied that the concession is deserved, full-pay leave may be granted for a period not exceeding **four weeks** in respect of any school year provided that arrangements approved by the Inspector are made for the absent teacher's work without additional expense to Government.

All applications for leave on account of illness must be supported by a medical certificate to the satisfaction of the Manager: otherwise the leave will be on no-pay.

### இளவரசியின் விஜயமும் யானைகளும்

எலிசபேத் இளவரசியினதும், அவர் கணவனான எடின்பரோ கோமகனினதும் தரிசனைசம்பந்தமான கொண்டாட்டங்களிலே கலந்துகொள்வதற்காக இலங்கையின் எல்லாப்பகுதிகளிலுமிருந்து 150 யானைகள் கொழும்புக்குக் கொண்டுபோகப்படவிருக்கின்றன. அவர்களுடைய தரிசனையின் போது அங்கே இவைகள் மூன்று நாட்களுக்குத் தங்கியிருக்கும். அங்கு இவைகளைப் போஷிப்பதற்குப் பெருந்தொகையான செலவுஏற்படவிருக்கிறது. நாள்ஒன்றுக்கு ஒரு யானைக்கு ஒரு கித்தில்மர ஓலைகள் வேண்டியிருக்கும். ஒரு மரத்திலுள்ள ஓலைகளின்விலை 40 ரூபாவரையிலாகும். சத்தம்போட்டு நகர்வாசிகளைக் குழப்பாதிருக்குமாறு இவைகள் ஓர் தனிமையான இடத்தில் விடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

—:—

**1. அக்காலத்திலே பௌத்த நூலாசிரியர்களால் எழுதப்பட்ட "இராசவளியா"எனும் நூலானது கண்டியிலே அம்மைநோய்பரந்த காலத்தில் ஆசா. யோசேவாஸ் முனிவரையும், அவரது தர்மசிந்தையையும்பற்றியாது கூறுகின்றது**

"வாஸ்என அழைக்கப்பெற்ற சுவாமியார் உணவும், உடையும், மற்றும் பொருட்களும் தம்முடன் எடுத்துக்கொண்டு கொழும்பிலிருந்து இங்கே வந்தார். அவர் நோயாளரைத் தேடித்திரிந்தார். காடுகளில்தானும் அவர்களைத் தேடிச்சென்றார். அவர்களுக்கு உறைவிடங்களாகக் கூடாரங்களை அமைத்தார். அவர்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் கவனித்துச்செய்தார்.— இந்தவாஸ்சுவாமியார் கிறீஸ்துவசகத்தின் 1711-ம்ஆண்டு ஐயவர்த்தனபுர மகாநுவரையிலே பாமபதம் அடைந்தார்" எனக் கூறுகின்றது.

**2. ஆசா. யோசேவாஸ் முனிவரைப்போலும் சுத்தவாளர் ஒருவருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டும் விஷயமாய் அவர் மேனி அடக்கஞ் செய்யப்பட்டுள்ள இடம் கண்டறியப்படவேண்டியது அவசியமா?**

இல்லை. உதாரணமாக, "ஜோன் அவ் ஆர்க்" என அறியப்படுகின்ற அர்ச். ஆர்க்கின் அருளம்மாளையும், அர்ச். தோமாஸ்மோரையும் எடுத்துக்கூறலாம். திருப்பட்டம்சூட்டுவதற்கு அவசியம்வேண்டியவைகள் முதல்வகுப்புக்குரிய புதுமைகளே.

**3. சுவேஸ் கால்வாய் பற்றிய விபரம் என்ன?**

இது மத்தியதரைக்கடலையும், செங்கடலையும் இணைக்கின்றது. இது ஒரு செயற்கைக் கால்வாய். இதனைவெட்டுவதற்குப் பத்துவருடங்கள் சென்றன. (1859—1869) இரண்டுகோடிபவுண் செலவாயிற்று. இதன்நீளம் 130 மைல். குறைந்தஆழம் 28 அடி. அகலம் 150 அடிமுதல் 300 அடிவரையில். இந்தக்கால்வாயை ஓர்கப்பல் கடந்துசெல்லப் 16 முதல் 17 மணித்தியாலம் பிடிக்கிறது. ஆபிரிக்காவைச் சுற்றிவாராமல் இக்கால்வாய்வழியாகக் கப்பல்கள் இந்தியாவுக்குவருவதால் 7,600 மைல் சுருங்குகிறது.

**4. சுவேஸ் கால்வாய்க்கு ஆயத்தீர்வை உண்டா?**

ஆம், இதனூடாகச்செல்லும் கப்பல்களிடம் ஆயத்தீர்வை அறவிடப்படுகிறது. இந்தஆயத்தீர்வையால் வருடம் ஒன்றுக்கு 30 லட்சம் பவுண் கிடைக்கிறது.

**5. இராணுவசட்டம் (Martial Law) என்பது என்ன?**

நாட்டிலே ஆபத்தான அல்லது குழப்பமானகாலத்தில் ஆட்சிமுழுவதும் இராணுவஅதிகாரத்துக்கு உட்பட்டிருப்பதே இராணுவஆட்சியாகும். இராணுவஆட்சி நடைபெறுங்காலத்தில் வழமையிலிருந்துவரும் சட்டங்கள் (Civil Law) செல்லமாட்டா.

**6. இங்கிலாந்திலே எட்டாவது என்றிஅரசன் அங்கிளிக்கன் சபையை ஆக்கியபோது என்ன நோக்கம் கொண்டிருந்தான்?**

பரிசுத்த பாப்பாண்டவருக்குக் கீழ்ப்படிந்து கட்டுப்படாத ஓர்சுதந்திரமானதும், தனக்குத்தானே கீழ்ப்படிந்து கட்டுப்பட்டதுமான ஓர் "கத்தோலிக்க திருச்சபை"யை ஆக்கவேண்டுமென்ற நோக்கங் கொண்டிருந்தான்.

**7. ஆனால், எட்டாவது என்றி அரசன் இறந்தபின் நிகழ்ந்ததென்ன?**

அவன் 1547-ம் ஆண்டு இறந்ததும், ஆறாவது எட்வாட்மன்னன் சிம்மாசனம் ஏறியதும் இங்கிலாந்திலே புரொட்டஸ்தாந்தசமயத்தைப் புகுத்தக் கிரான்மருக்கு வழிபண்ணி விட்டன.

## சொல் அம்பும் கல் அம்பும்!

நாடகமேடையில் தெம்பாங்கு, தெந்தனப் பாட்டென்றால் கேட்பவர்களுக்கு நாசிகாசூரணம் பாவித்தது போல் இருக்கும் ஒரே காகோஷமாய் இருக்கும். அதுபோல அரசியல்மேடையில வசைமாரியென்றால் போதும். இதுதான் இப்போதைய பேச்சுஅணி!

உபசாரக்கூட்டம் ஒன்றில் பேச்சாளர்ஒருவர் தம்மைமறந்து, வந்தநோக்கத்தை மறந்து, ஒருவசைப்புராணம் படித்தார். 'மெய்மறந்து பேசுவது' என்று சொல்வதுவழக்கம். உண்மையைமறந்து பேசுவதுதான் இதன் உண்மை.

"இனிய உள்வாக இன்னாதகூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்று பொய்யாமொழிப்புலவன் சொன்னபொழுது அரசியல்ஆழியிலே அலைஇப்படி அடிக்கவில்லைப்போலும். கொந்தளிப்பும் குமுறலும் இல்லைப்போலும். தமிழ்மரபின்படி இன்னாச்சொல்லாளருக்கு எடுத்துக்காட்டிய உவமையும் இனியதாயிருத்தல் காண்க.

தமிழ்என்பது இனிமையைக் குறிக்கும்என்பர். எனவே, ஏச்சுப்பேச்சுக்கு இந்தமொழி இடங்கொடாது. ஆனால், தமிழ்என்ற அமுதமொழியைத் தலையிற்றாங்கிய இருகட்சியினர் ஒருவருக்கொருவர் சொல்அம்பும், கல் அம்பும் தொடுப்பது தமிழ்ப்பண்பாடாய் இருக்குமா?

கட்சிகள்சார்பாகப் பேசுகிறவர்கள் தங்கள்தங்கள் கட்சிகளின் நோக்கங்களை எடுத்துவிளக்கிக் காட்டினால் பொதுசனங்கள் அவற்றைப் பரிசீலனை செய்து தங்கள்அபிப்பிராயப்படி நடந்துகொள்ளலாமே. இப்படியல்லாது ஒருவரைஒருவர் ஏசுவதும், கூசாது அமங்கலச்சொற்கள் பேசுவதும் தமிழ்மரபைத் தழுவுகின்றோம் என்று தம்பட்டம்தட்டும் கட்சிகளுக்கு முறையாகாது.

கல்யாணவீடு நடக்காமற் தடுப்பதற்குப் பகையாளி ஒருவர் சீப்பை எடுத்து ஒழித்தமாதிரிக் கூட்டங்கள் கூடாமற் தடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் கையாடும் உபாயங்கள் தமிழ்மரபாகமாட்டாது.

சனநாயக ஆட்சிஎன்றால் பொதுசன அபிப்பிராயம் பொல்லடிக்கும், கல்லெறிக்கும், ஏச்சுக்கும், பேச்சுக்கும் பயந்து உண்டாக்கப்படுவதா? பொய்ப்பிரசாரத்தில், அவதூறுபெய்வதால் பிழையான பொதுசனஎண்ணத்தைப் பிழையாகஉண்டுபண்ணுவதா?

"வாய்மையின் வழாது
மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ
எய்தா அரும்பொருள்"

என்ற இளங்கோவடிகள் இனத்தைச்சேர்ந்தவர்கள் உள்ளதைஉள்ளபடி எடுத்துஉரைத்து உண்மைஉயர்ந்த நெறியில் தவறாதுஒழுகி வருவதே தமிழகத்தைத் தனிச்சிறப்புடையதாகச் செய்யுந்தொண்டு என்பதைச் சொல்லவும்வேண்டுங்கொல்!

## ருஷியாவின் கடற்பலம்

"ஜேனின் போராடுங் கப்பல்கள்" எனும்சஞ்சிகையின் கடைசியானபிரதியில் கண்டுள்ளபடி, தற்போதுருஷியா 370 சப்மறின்களைச் சேவையிற் கொண்டிருக்கிறது. மற்றும் 120 சப்மறின்களைக் கட்டிவருகிறது. யுத்தக்கப்பல்சட்டும் புதிய ஓர்திட்டத்தின் கீழ் 1,000 சப்மறின்களைக் கட்ட ஆயத்தப்படுவதாய் அறிவிக்கப்படுகிறது. 3 புதிய யுத்தக்கப்பல்களையும், 20 குருயிசர்களையும், 120 டிஸ்ரோயர்களையும் அது கட்டுவதற்குத் திட்டஞ்செய்திருப்பதாக நம்பத்தகுந்தவழியாகச் செய்திகிடைத்திருக்கிறது.

## பிரியாவிடை வைபவம்

### சில்லாலை

சில்லாலைக் கத்தோலிக்கபாடசாலைத் தலைமையாசிரியாராகப் பன்னிருவருடகாலமாகச் சேவைசெய்துவந்த திரு. A. R. மனுவேற்பிள்ளை அவர்கள் நாரந்தனைக்கு மாறிச்செல்வதையிட்டுச் சென்ற 6-1-52 ஞாயிறு பி. ப. 5 மணியளவில், அழகுற்றுவிளங்கிய பாடசாலைமண்டபத்திலே ஒலிபெருக்கி இசைபெருக்க, தலகாரியஸ்தர், பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் கூடிய சமூகத்தில், சனசமூக முன்னேற்ற சங்கதலைவர் திரு. N. யேமஸ் ஆசிரியர்தலைமையில் ஓர்பிரியாவிடைவைபவம் ஆரம்பமாகியது.

மலர்மாலைகள் சூட்டப்பெற்றதும், கட்டளைக்குரவர் வண. L. டெசிச் சுவாமியவர்கள் பிரியாவிடைநாயகரின் சிறந்தசேவை, பிரமாணிக்கமான ஊழியம், குருபக்தி என்பனவற்றைப் பாராட்டி அரியதோர் சொற்பொழிவாற்றினர். பாடசாலைச்சிறார்களால் சோபந்தரும் பிரியாவிடைக்கீதங்கள் படிக்கப்பெற்றன. பின்னர்ஆசிரியரின் குணநலனையும், பொதுநல ஊழியத்தையும், சஞ்சூசையப்பர் வாலிபசங்க வளர்ச்சிக்காக அவர்செய்த தன்னலமற்ற சேவையையும், அவர்காலத்தில் சமயகல்வி, மரியாயின்சேனை, கல்விவிருத்தி, சமூகமுன்னேற்றம், விளையாட்டு, உரைநடை, இசைநடைப் போட்டிகளிலே பாடசாலைஅடைந்துள்ள முன்னேற்றங்களையும் பாராட்டித் தலைவராலும், தேயிலைப் பிரசாரச்சபைப் பரிசோதகர் திரு. S. நீக்கிலாப்பிள்ளை, ஆசிரியர் திரு. S. லோறன்ஸ், திரு. செ. பிரான்சிஸ் சேவியர் என்பவர்களாலும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

ஆசிரியர் திரு. இக்னேஷஸ் அவர்கள் பிரியாவிடைநாயகரின் அன்பையும், அறிவையும், கவிதாசக்தியையும், கட்டுரைவன்மையையும், ஹாஸ்யப்பேச்சுத் திறமையையும் எடுத்துக்காட்டும் பிரியாவிடைப் பத்திரம்ஒன்றுபடித்துக்கொடுத்தனர். அன்பின் அறிகுறியாக பணமுடிப் பொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. ஈற்றில் ஆசிரியர்எழுந்து தமக்குச்செய்த உபசாரணைக்காக நன்றித்திகூறியதும் பெரியோர்சமேதராய், மோட்டர்தாரூடராய்த் தமது ஜனனபதியாகிய கொழும்புத்துறைக்குப் பயணமாயினர். ஆசிரியர் சென்றுழியெங்கும் சிறந்துவாழ்க! —நிருபர்.

## கி.மு. சங்க ஸ்தாபகம்

### பள்ளிமுனை

பள்ளிமுனைப் பாடசாலைமண்டபத்திலே 9-1-52 மாலை 6-30 மணிக்குப் பெரியோரும் சிறியோருமாகப் பெருந்திரளான ஆடவர்கள்கூடிய சமுகத்திலே மன்னார், உதவிஏசன்றர் திரு. மொறகொட அவர்கள் கி. மு. சங்கத்தலைவர் ஆசிரியர் டானியேல் றோச் அவர்களாலும், அதிகாரம் அவர்கள் உபதலைவர் திரு. சந்தியா பிகிருடோ அவர்களாலும், கி. மு. ச. அதிகாரி அவர்கள் காரியதரிசி திரு. பிரகாசம் பிகிருடோஅவர்களாலும் மாலைசூட்டி வரவேற்கப்பட்டபின் சங்க தலைவர் திரு. டி. றோச் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. ஏசன்றர் அவர்கள் எழுந்து தமிழில்பேசியபோது சங்கத்தினால் ஊருக்குப் பலவிதமான உதவிகளை அரசாங்கம் செய்யவிருக்கிறது; அவைகளைப்பெற வேண்டுமானால் சங்கத்தை ஒழுங்காகவும், ஊக்கமாகவும் நடத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அதன்பின் மன்னார் அதிகாரமும், கி. மு. ச. அதிகாரியும் பேசியபின் காரியதரிசி திரு. பி. பிகிருடோ அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிதே நிறைவேறியது.

—நிருபர்

## பள்ளிமுனை : ஆண்டுவிழா

பள்ளிமுனை, சனசமூகநிலையத்தின் முதலாவதுஆண்டு நிறைவுவிழா சென்ற 6-1-52 ஞாயிறுபிற்பகல் 4 மணியளவில் மன்னார்ப்பட்டினசங்க தலைவரது அக்கிராசனத்தின்கீழ் ஆரம்பமாகியது. காரியதரிசியும், தனாதிகாரியும் சமர்ப்பித்தஅறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நிலையத்தின்புதிய தலைவராகத் திரு. ஆ. பிரகாசம் பிகுருடோஅவர்களும், உபதலைவராகத் திரு. எலியாஸ் தமபுஅவர்களும் தெரியப்பட்டனர். காரியதரிசியாகத் திரு. எஸ். எஸ். பிகுருடோ, உபகாரியதரிசியாகத் திரு. நீ. அந்தோனி பிகுருடோ என்பவர்கள் மீண்டுந்தெரியப்பட்டனர். தனாதிகாரியாகத் திரு. ஆ. கிறிசாந்து பிகுருடோ, உபதனாதிகாரியாகத் திரு. எம. மருசலீன் பெரேராஎன்பவர்கள் தெரியப்பட்டபின் நிர்வாகசபை அங்கத்தவர்களாக ஏழுபேர்தெரியப்பெற்றார்கள். அதன்மேல் அக்கிராசனராலும், வண. A. உதநின் சுவாமியவர்களாலும் குறிப்புரைகள் கூறப்பட்டபின் காரியதரிசியின் நன்றியுரையுடனும், சிற்றுண்டிஉபசாரணையுடனும் விழாஇனிது நிறைவேறியது.

—நிருபர்

## சேவைபாராட்டு வைபவம்

சென்ற 13-1-52 ஞாயிறன்று பிற்பகல் 7 மணியளவில் ஊர்காவற்றுறை திரு இருதய வாசிகசாலையில் சேவைபாராட்டு வைபவம்ஒன்று நடந்தேறியது. தேசசேவையில் ஈடுபட்டு உழைத்தவரான ஆசிரியர் A. F. T. செலவத்துரை அவர்கள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லுகையில் அவரது அருஞ்சேவைகள் பலராலும் பாராட்டப்பெற்றன. ஆசிரியர் T. S. அருளானந்தம் தலைமை வகித்தனர். ஆசிரியர்சுப்பிரமணியம் பேசியபோது: அவர் கிராம முன்னேற்ற சங்கத்தின் நிர்வாகசபை அங்கத்தவராய் இருந்தபோது தங்களுடன் ஒத்துழைத்ததற்காக நன்றி கூறினார். ஆசிரியர் T. A. F. இராசையாவும், மற்றும்சிலரும் அவரைப் பாராட்டிப்பேசினர். பின்னர் ஓர் தோட்ட உபசாரணை நடந்தேறியது. ஈற்றில் ஆசிரியர் செல்வத்துரை தமது நன்றியுரையிலே தாம் பல ஆசிரியர்களுடன் கலந்து வாழவேண்டியிருப்பதால், அவர்களின் முற்போக்கான பழக்கவழக்கங்களையும், அவர்களின் நற்கொள்கைகளையும் அறிந்து தமது நாட்டுச் சேவையில் அவைகளைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்து நின்றார்.

S. I. P. R.

## புதியசுதந்திரநாடு

வடஆபிரிக்காவிலே எகிப்துக்கும், அல்ஜீரியாவுக்கும், ரியுனிசியாவுக்கும் இடையிலுள்ளதும், இரண்டாவது உலகயுத்தத்துக்குமுன் இத்தாலிய குடியேற்றநாடாய் இருந்ததும், அந்தயுத்தத்திற்குப்பின் பிரித்தானிய— பிரான்சிய நிர்வாகத்தில் இருந்துவந்ததுமான லிபியாநாட்டுக்குச் சென்றமார்கழிமாதம் 24-ந் தேதியன்று சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. இது சிறனெய்க்கா, திரிப்பொலிற்றானியா, பெசான் எனும் மூன்றுபகுதிகளை அடக்கியது. 1952-ம் ஆண்டின் தைமாசத்துள் இந்தநாட்டுக்குச் சுதந்திரம்அருளப்படவேண்டுமென்று 1949-ம் ஆண்டு மார்கழிமாதம் ஐக்கியநாடுகளின் பொதுச்சபையில் ஓர்தீர்மானம் நிறைவேறியது. சிறனெய்க்காவில் சுதேசமன்னராயிருந்த எமிர் செனூஸிஎன்பவரே லிபியாமுழுவதுக்கும் அரசராகப் பிரகடனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். அதனால்அங்கே இதுவரை அதிகாரம் வகித்திருந்த பிரித்தானியும், பிரான்சும் தங்கள்அதிகாரத்தை அவரிடம் ஒப்படைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சோதரர்களே!

மாட்டுத் தொழுவம் தனக்குக் கிடைத்த பெருமையைப்பற்றி உரைத்த எல்லாவற்றையும் விளங்கிக்கொண்டீர்களா? மாட்டுத் தொழுவம் இவ்வளவு பெருமை கொள்ளுமேயாகில் நாங்கள் — பாலக யேசுவை இருதயத்தில் வரவேற்கிற நாங்கள் எவ்வளவு பெருமை கொள்ள வேண்டும்.

"நல்லவை செய்திடடா", 'நல்நடை" என்ற இரண்டு பாட்டுகளும் உணர்ச்சி ஊட்டுபவை. நன்மையைச் செய்ய ஊக்கம் உண்டாக்கும். இந்த "ஊக்கமது கைவிடேல்." சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.



## எங்கே போகின்றாய்?

1

குழந்தாய்! எங்கே போகின்றாய்!
கோவிலுக்குப் போகின்றேன்
முழந்தாள் இட்டே யேசுவிடம்
மோட்சங் கேட்கப் போகின்றேன்

2

கண்ணே! எங்கே போகின்றாய்?
கல்விச்சாலை போகின்றேன்
எண்ணும் எழுத்தும் கற்றிடவே
இளமையிலேயே போகின்றேன்

3

பிள்ளாய்! எங்கே போகின்றாய்?
பிச்சை கொடுக்கப் போகின்றேன்.
தள்ளாக் கிழவர் வாசலிலே
தாங்காப் பசியால் வாடுகிறார்

4

புதல்வா! எங்கே போகின்றாய்?
பூஞ்சோலைக்குப் போகின்றேன்
மகிழ்வாய் நல்ல மலர்தேடி
மாதா பாதம் சூடிடுவேன்

—தேரேசா

## நான்கண்ட ஒருகனவு

[எனக்குத் தேசங்களைப் பார்க்க வேண்டும் என்றும், ஆங்காங்கு உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்க வேண்டும் என்றும் அதிக ஆசை. ஆனால், நான் என்னுடைய ஊரை விட்டு வேறிடம் சென்று அறியேன். காரணம் வேறென்ன? வறுமைதான். என் நண்பர்கள் பலர் கொழும்பு நகரைப் பற்றியும், மிருகக் காட்சிச் சாலையைப் பற்றியும் கூறும் போதெல்லாம் எனக்கு ஆசை அதிகரிக்குமே தவிர ஆவதொன்று இல்லை.]

இரவு பத்து மணி. மழை சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டு இருந்தது. நான் கட்டிலில் புரண்டு கொண்டு இருந்தேன். அன்று பகல் வகுப்பு அறையில் மகேசன் விபரித்த மடுவு மாதாவின் மகிமையான தோற்றமே என் மனக் கண்ணில் நின்றது.

இந்த நிலையில் யாரோ என்னைக் கூப்பிட்டார்கள். எழுந்து சென்றேன். சாந்தமே உரு எடுத்த சுவாமியார் ஒருவர் என் எதிரில் நின்றார். அவர் என்னைத் தன்னுடன் மடுவிற்கு வரும்படி அழைத்தார். என் ஆனந்தத்தைக் கேட்கவா வேண்டும்? பெற்றோருக்கும் சொல்லாமலே புறப்பட்டு விட்டேன். குருநாதரின் அழகிய மோட்டரில் இருவரும் விர்ளனப் பறந்தோம். மடுவை அடைந்தோம். என் மகிழ்ச்சிக்கோ அளவில்லை. தேவதாயாரின் திவ்விய தரிசனம் எனக்குக் கிட்டியது. பலநாளாகக் கொண்டிருந்த ஆசையெல்லாம் சேர்த்து வெகுநேரமாக மன்றாடினேன். அன்னையின் அருள் பொழியும் உருவத்தைக் கண்களால் அள்ளிப்பருகினேன். இவ்வாறு என்னையும் மறந்த நிலையில் இருந்த என்னைச் சுவாமியார் அழைத்தார்.

போசனம் முடிந்ததும் சுவாமியாருக்கு என் ஆசையைத் தெரிவித்தேன். அவரும் சம்மதித்தார். இருவரும் கொழும்பு சேர்ந்தோம். வரிசை வரிசையாக வானளாவிநின்ற வர்ண மாளிகைகளைக் கண்டு நான் வியப்புற்றேன். துறைமுகத்தில் நின்ற தொகையான கப்பல்களையும், அவற்றில் இருந்து [illegible]டிரையும் கண்டு அயிர்த்தேன். காட்சிச்சாலையில் விநோத மிருகங்களையும், பறவைகளையும் கண்டு மனம் பூரித்தேன். யாவும் பார்த்தபின் இருவரும் கடைவீதி சென்றோம். நல்ல உடைகள் சிலவும், புத்தகங்களும், விளையாட்டுப் பொருட்களும் சுவாமியாரால் எனக்கு அளிக்கப்பட்டன.

மறுநாள் காலை அவர் என்னை விமானம் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். விமானம் விண்ணுறப் பறந்தது. என் மகிழ்ச்சியும் இறக்கை கட்டிப் பறந்தது. திடீரென வானம் இருண்டது. மழை தாரை தாரையாகப் பெய்தது. விமானமும் கீழ் நோக்கியது. ஓர் மின்னலின் அதிர்ச்சியால் விமானம் ஓட்டி நிலை தளர்ந்தான். விமானம் "தடால்" என்று ஓர் மரத்துடன் மோதியது. நான் "அம்மா" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தேன்.

கண் விழித்தபோது அம்மா எனக்கு அருகில் நின்றா. நான் கடதாசியால் செய்த ஆகாய விமானம் கிடந்தது. நான் கட்டிலிலே இருந்து கீழே விழுந்து கிடந்தேன். என் கால் கட்டிலின் காலுடன் அடிபட்டதால் வலி எழுந்தது. அப்போதுதான் எனக்கு நான் கண்டவை யாவும் கனவெனப் புலப்பட்டது. மறுநாள் இதை நான் என் நண்பர்களுக்குச் சொன்னபோது விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆனால், நான் இந்தக் கனவால் பரம திருப்தி அடைந்தேன்.

S. பிரான்சிஸ் X. மாணிக்கம்



## குட்டிப்பூனை

1. சின்னக் குட்டிப் பூனை
எங்கள் வீட்டுப் பானைப்
பாலைத் தட்டிக் குடிக்கும்
காலை எட்டி நக்கும்

2. துள்ளித் துள்ளி ஓடும்
துரத்திச் சென்றால் சீறும்
சோறு போட்டால் உண்ணும்
வாயைக் கையால் துடைக்கும்

—ஞா. அலோசியஸ்

## செல்வன்

செல்வன் என்ற பெயரைக் கேட்டதும் நீங்களும் செல்வனாய் இருக்கத்தான் விரும்புவீர்கள். நல்லது, செல்வன் சிறியவனாய் இருந்தாலும் தன் பெயருக்கு இணங்க அறிவுச் செல்வனாய் விளங்கினான். இவனில் மிகச் சிறந்து விளங்கிய குணம் யாதெனில், எந்தப் பொருளையும் ஆராய்ந்து உண்மையை அறியும் தன்மையே. ஒருவரில் குற்றம் குறை காணப் பட்டால், அல்லது கேள்விப் பட்டால், அக்குற்றம் குறை காணப் பட்டவர்களிடம் அதை விசாரித்து அறிவானே அன்றி வேறு எவரிடமும் அந்தக் குறையைப் பற்றி எடுத்துக் கூறவும் மாட்டான். அதன் காரணத்தை வினவவும் மாட்டான். ஆனால், பிழை காண்பவர்களிடம் அதை விசாரித்து அறிவான். இவ்வாறே தன் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வான்.

செல்வனுடைய பேரனுக்கோ [illegible] பல்லும் இல்லை. தலைமயிருமோ முன்பு இருந்த நிறத்திற்கு எதிர் நிறமாய் விட்டது. ஆனால், இவர் குறும்புகளோ சிறு பையன்களிலும் பார்க்க மிக மோசமாய் இருந்தன. இது செல்வனுக்கு மிக ஆச்சரியம் உண்டு பண்ணிற்று. இதன் காரணத்தை அறியவும் அவனுக்கு மிகச் சங்கடமாய் இருந்தது. ஏனெனில், இவரது குறும்பின் காரணத்தை வேறு எவரும் சரியாகச் சொல்ல மாட்டார்கள். பேரனைக் கேட்டால் என்ன தான் நேருமோ என்ற பயம் செல்வனை வருத்தியது.

கடைசியாய் ஒருநாள் செல்வனின் பேரன் காலைப் போசனம் அருந்திய பின் சாய்மனைக் கதிரையில் புன்னகை முகத்துடன் பத்திரிகை பார்த்துக் கொண்டு இருந்தார். செல்வன் இதுதான் தக்க சமயம் என்று அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தான்.

செல்வனைக் கண்டதும் பேரன், "என்ன ஏதோ அதிகம் யோசிப்பவன் போல் காணப்படுகிறதே" என்றார். "ஆம், உங்களிடம் இருந்து சில சம்பவங்களின் நியாயத்தை அறிய வேண்டி இருக்கிறது" என்றான் செல்வன். "அது என்ன கேள் பார்ப்போம்" என்றார் பேரனார்.

"நீங்கள் அளவுக்கு மிஞ்சி மிகவும் பருத்து இருக்கிறீர்கள் என்பதையும், வயோதிபப் பிராயம் என்பதையும் கவனியாமல் மிக ஓர்மமாய்த் தலைகீழாய் நிற்கிறீர்களே; உங்கள் வயதுக்கு இச்செயல் சரி என்று எண்ணுகிறீர்கள்?" என வினவினான் செல்வன்.

பேரன், "என் இளமைப் பிராயத்திலே எனது மூளைக்குக் கெடுதி வரும் என்று அஞ்சினேன். ஆனால், இப்போது என் தலையில் அவைகள் (மூளை) இல்லை என்று நான் நன்கு அறிவேன். இதனால் தான் யான் மிக ஓர்மமாய்த் திரும்பவும் திரும்பவும் தலைகீழாய் நிற்கிறேன்" என்றார் பேரன்.

"உங்களுடைய பற்கள் எல்லாம் விழுந்து போயின. அதனால் முரசும் பலவீனமாய் இருக்குமே. ஆனால், நீங்கள் ஒரு முழுக் கோழிக்குஞ்சின் இறைச்சியையும், எலும்புகளையும் கூட ஒன்றும் விடாமல் சாப்பிட்டு விடுகிறீர்களே. அது எவ்வாறு" என்று கேட்டான் செல்வன்.

"நான் உன் பேத்தியுடன் நீதிப் பிரமாணமாய் நடந்து அவள் செய்யும் ஒவ்வொரு சிறு குற்றத்தையும் சொல்லி அவளுடன் எப்போதும் வாதாடிய படியால் என் அலகுகளுக்குப் போதிய அளவு அப்பியாசம் கிடைத்தது. இதனால் இப்போதும் என் அலகுகள் மிகவும் வலிமையாய் இருக்கின்றன பயலே! உங்களுக்குப் பள்ளிக் கூடத்தில் தேகாப்பியாசம் பழக்குவது உங்கள் தேகம் வலிமை பெறுவதற்கு அல்லவா" என்றார் செல்வனின் பேரன்.

சிறுவர்களே! நீங்களும் செல்வனைப் போல் அறிவுச் செல்வனாய் வாழுங்கள். இச்செல்வத்திற்கே ஆசைப் படுங்கள். ஏனெனில், இந்தச் செல்வமே எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது. அல்லாமலும் இந்தச் செல்வத்தை எவரும் வஞ்சிக்க மாட்டார்கள். செல்வனைப் பின்பற்றி எந்தப் பொருளையும் ஆராய்ந்து அறியுங்கள். எவரையும் தூற்றாதீர்கள்.

M. F. சேவியர்
இளவாலை.

## ஏற்ற இருப்பிடம்

மகன்:— அம்மா, நீ எனக்கு அன்பொடு சொல்ல மாட்டயா, இந்த மாநிலத்தில் யேசுபிரான் இருப்பதற்கு ஏற்ற இடம் எது?

தாய்:— எங்களுக்காகப் பிறந்த யேசுபிரான் இருப்பதற்கு ஏற்ற இடம் யாதெனில், உன்தன் தூய இருதயம் தான் கண்மணி. அதை நீ உன் இறைவனுக்குச் சந்தோஷமாய் ஈந்திடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## ஐரோப்பிய—இந்திய கடற்பாதை

—பம்பாய்

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடற்பாதையை முதன்முதலாவதாகக் கண்டுபிடித்தவர் ரூஷியர் ஒருவரே என்றும், போர்த்துக்கேய மாலுமி வாஸ்கோ-டி-காமா அல்லவென்றும், கம்யூனிஸ்தர்கள் உரிமைகொண்டாடக் கிளம்பியிருப்பதை "ரைம்ஸ் அவ் இந்தியா" எனும் பத்திரிகை மறுக்கிறது. சோவியற் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்குப்பேர்ளினில் பிரசுரமாகும், "பேர்ளினர் செய்துங்" எனும் பத்திரிகையே மேற்சொன்ன கம்யூனிஸ்த விளம்பரத்தை வெளியிட்டது.

"ஐயோ பாவம், வாஸ்கோ" என்ற தலைப்பில் பம்பாய் "ரைம்ஸ்" தீட்டும் தலையங்கம் வருமாறு: நானூற்றுஐம்பது வருடங்களுக்குமுன் இந்தியாவுக்கு நன்னம்பிக்கை முனை (ஆபிரிக்கா) வழியைக் கண்டுபிடித்த போர்த்துக்கேயமாலுமி வாஸ்கோ—டி—காமாவின் புகழுக்குக்களங்கம் ஏற்படும் ஆபத்து இப்போது வந்திருக்கிறது. கிழக்குப்பேர்ளின் பத்திரிகைக் கூற்றுப்படி, இந்தப்பெருமை வாஸ்கோவுக்கு முப்பது வருடத்துக்குமுந்தியே ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு விசித்திரமான ஒருகடல்வழியைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படும் அபனூஸி நிகிட்டின் என்ற ரூஷியரைச் சாருகிறது.

வாஸ்கோ—டி—காமா கப்பல்வழிகண்ட வரலாறு சரித்திரப் பிரசித்தமானது. ஆனால், வல்காநதி வழியாகக் கஸ்பியன் கடலினூடாய் இந்தியாவுக்கு நிகிட்டின் என்ற ரூஷியர் கப்பலைச் செலுத்தி வந்ததாகச்சொல்லப்படுகிறது. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குத் தரைமார்க்கமாய்ப் பாரசீக பாலைவனங்களையும், மலைகளையும் கடந்துவருவதென்பது, ஆயிரங்காலமாகத் தெரிந்தவிஷயம். இந்நிலைமையில் நிகிட்டின் என்றரூஷியர் கப்பல்விட்டதாகக் கம்யூனிஸ்த பத்திரிகை காடிவிடுகிறது. கஸ்பியன்கடல் நாற்புறமும் தரைசூழ்ந்தது என்றுபடித்த பூகோளப்படம் இந்தவேளை நமது ஞாபகத்துக்கு வருகிறது.

## ஏற்றுமதித் தடைப்பொருள்கள்

—வாஷிங்ரன்

அமெரிக்க அரசாங்க பரஸ்பர பந்தோபஸ்து நிர்வாகசபையானது சோவியற்ரூஷியாவுக்கும், அதன்சகபாடி நாடுகளுக்கும் ஏற்றுமதித்தடைசெய்த 313 இனப்பொருட்களை வெளியிட்டுள்ளது. இவைகள் சட்டத்துக்கும்பொருந்தியவாறு மூன்று வகைப்படும்.

முதல்வகையில் ஆயுதம், வெடிமருந்து, யுத்தசாதனங்கள், அணுச்சக்திஉற்பத்திக்கான மூலப்பண்டங்கள் முதலான 21 இனங்கள் அடங்கியுள்ளன. இவற்றை ஏற்றுமதிசெய்யும் நாடுகளுக்கு உடனடியாக அமெரிக்க பொருளாதார, இராணுவ அல்லது பண சகாயம் நிறுத்தப்பட வேண்டும்என்றும், அதில் விதிவிலக்கு இல்லை என்றும் சட்டம்சொல்லுகிறது. பெற்றோலியம்சாமான்கள், போர்க்கருவிகள் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள், முதலியவைஅடங்கிய 264 இனங்கள் இரண்டாவது வகையில் இருக்கின்றன. இவற்றை ஏற்றுமதிசெய்யும் நாடுகளும் அமெரிக்க சகாயத்தை இழக்கும். எனினும் இவ்விஷயம் ஜனாதிபதியின் சமயோசித எண்ணத்துக்கு உட்பட்டது. மூன்றாம்வகையில் றப்பர், ஈயம்முதலான 28 இனங்கள் அடங்கும்.

## அமெரிக்கா தயங்காது

—வாஷிங்ரன்

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக எவ்விததியாகமும்புரிய அமெரிக்கா தயங்காது என்பது உறுதிஎன அமெரிக்க பொக்ஷமந்திரி ஜோன் ஸ்னைடர் அவர்கள் ஓர்வானுரையில் அழுத்தமாகக் குறிப்பிட்டார். மேலும் அவர் சொன்னதாவது: "இனிமேல் ஆக்கிரமிப்பு வெற்றிபெறாது; அது நஷ்டத்தையே விளைவிக்கும் என்பதைச் சோவியற்தலைவர்களுக்கு ஐயந்திரிபற உணர்த்தும் அளவுக்குத் தற்காப்புப்பலத்தை நிதரிசனப்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாகும். சோவியற்ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதில் அமெரிக்கா பெரும்பங்கு ஏற்றுள்ளது. எப்படியும், இந்த ஏற்பாடு முழுவெற்றி பெறுவது சுதந்திர உலக குடும்பத்தின் கூட்டுறவையே பொறுத்தது.

"கோறியாவில்மூண்ட கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கு முற்பட்டபிறகு அமெரிக்கா தனதுசொந்த இராணுவ விருத்திக்காகவும், சுதந்திரநாடுகளின் பொருளாதார, இராணுவ விருத்திக்காகவும் செய்துள்ள செலவுகள் முன்னிலும்பார்க்க மும்மடங்கு கூடியிருக்கிறது. இவையனைத்தும் அமெரிக்க ஜனநாயகமும், அதன்மூலம் உலக ஜனநாயகமும் நிலைக்க அமெரிக்கர்புரியும் தியாகங்கள் என்பதில் என்னசந்தேகம்?"

## உணவு உற்பத்தியின் முக்கியத்துவம்

—நியூ ஆர்லியன்ஸ்

உலகில்இறுதியாக ஏற்பட்டேதீர வேண்டிய சமாதானத்தை உருவாக்குவதில், உணவுஉற்பத்தியானது வலிமைமிகுந்த ஒருசாதனமாகவே இருந்து வரும் என்கிறார் அமெரிக்கவிவசாய உதவிமந்திரி கிளாறென்ஸ் ஜே. மெக்கார்மிக் அவர்கள். மேலும் அவர் குறிப்பிடுவதாவது:

உணவுப் பற்றுக்குறையே இன்றையஉலகில் மிகப்பெருத்த பொருளாதாரபிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்கிறது. அமெரிக்காவின் அமோக உணவுஉற்பத்தியானது, உலகசாந்தியை வளர்க்கும்முயற்சிகளில் நமக்குப் பலமிகுந்தசாதனமாக விளங்கி வருகிறது. இந்தநிலைமையில் நமது உணவுஉற்பத்தியைத் தொடர்ந்து அபரிமிதமானநிலையில் வைத்திருப்பது எவ்வளவு மிகமிக முக்கியம் ஆனது என்பது சொல்லாமலேவிளங்கும்.

உலகிலே இந்தநாட்களில் நெறிகெட்டுத்திரியும் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புச்சக்திகளினால் சுதந்திரநாடுகளுக்குப் பெரும்ஆபத்து உண்டாயிருக்கிறது. இந்தஆக்கிரமிப்புக்குத் தக்கதடுப்புகளை அமெரிக்கமக்கள் படைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், அதேமாதிரித் தடுப்புகளைச் சிருஷ்டிக்கச் சுதந்திரநாடுகளுக்கு அமெரிக்கர் உதவியும்வருகின்றார்கள்.

கிரேக்கநாட்டைக் கம்யூனிஸ்தர்கள் கொள்ளைகொள்ளாமல் அமெரிக்கமக்கள் தடுத்திருக்கிறார்கள். சோவியற் ஆதிக்கத்தினின்றும் தனதுவிடுதலையைப் பாதுகாத்துக்கொள்ளத் துருக்கிக்குத் துணைபுரிந்திருக்கிறார்கள். தென்கோறிய குடியரசுமீது வலுத்தாக்குதல்தொடுத்த கம்யூனிஸ்தபடைகளைப் புறமுதுகுகாட்டச் செய்திருப்பதோடு, ஆசியாவைக் கட்டியாளக் கம்யூனிஸ்தர்கள் தயாரித்துவைத்திருந்த நோஅட்டவணையையும் தகர்த்திருக்கிறார்கள்.

சுருங்கக் கூறப்புகின், தங்கள்ஆற்றலையும் பெருக்கிக்கொண்டு [illegible]

## பாலக யேசுவின் பாப்பாப் பாட்டு

1

பாடி மகிழ்ந்திடுவாய் பாப்பா — யேசு
பாலன் பிறந்தாரல்லோ பாப்பா [பின்
நாடிப் பதம்பணிவாய் பாப்பா— அன்
நன்றித் துதிபுரிவாய் பாப்பா

2

துள்ளிக் குதித்திடுவாய் பாப்பா - ஜெய
துத்தியமே பாடிடுவாய் பாப்பா
நள்ளிரவு வந்துதித்தார் பாப்பா—தேவ
நாதன் மனுவுருவாய் பாப்பா

3

ஆராரோ ஆரிவரோ பாப்பா —இவர்
ஆதிபரனல்லவோ பாப்பா
பாராரோ பட்சமுடன் பாப்பா—நாமும்
பாதாரம் தேடுவமேல் பாப்பா

4

சின்னக் குழந்தையேசு பாப்பா—வந்த
செய்திதான் கேட்டிலையோ பாப்பா
உன்னை நினைத்துத்தானே பாப்பா—தம்
ஊரைவிட்டு வந்தாரே பாப்பா

5

என்னதான் கேட்டிடினும் பாப்பா—
அவர்
இல்லையென்று சொல்லமாட்டார்
பாப்பா
சொன்னசொற் தவறமாட்டார் பாப்பா
—கேட்டுச்
சோதித்துப் பாரிதனைப் பாப்பா

6

சீனவெடி மூட்டாசு பாப்பா—நல்ல
"சில்க்" சட்டை சப்பாத்து பாப்பா
ஆனபொருள் அத்தனையும் பாப்பா
—அவர்
அன்புகலந் தின்பமுடன் தருவார்

7

பரலோக சம்பத்துகள் பாப்பா—மிகப்
பட்சமுடன் கொண்டுவந்தார் பாப்பா
தரவேண்டு மென்றுநீகேட்டால்-இவர்
தந்திடுவார் கட்டாயம் பாப்பா

8

பொறுமை வறுமையெனப் பாப்பா—
காட்டிப்
போதிக்கின்றார் உனக்குப் பாப்பா
மறுமை திறக்கும்இவை பாப்பா—
செல்வம்
மற்றவை யாவும்விழல் பாப்பா

9

பஞ்சுமெத்தை ஒன்றவர்க்குப் பாப்பா
— வேணும்
பக்குவமாய்த் தான்படுக்கப் பாப்பா
நெஞ்சுமெத்தை தானதுவே பாப்பா
—பெற்றால்
நேசிப்பார் உன்னைநிதம் பாப்பா

10

உள்ளச் சமாதானம் பாப்பா— வது
உண்மையுள தோசொல்லு பாப்பா
நல்லமனச் சித்தமுண்டேல் பாப்பா
— நானும்
நன்மையே என்றுமுண்டு பாப்பா

11

கர்த்தர் ஜனனமாகிப் பாப்பா - தந்தார்
புத்தாண்டு ஒன்றினையும் பாப்பா
எத்துணைய அன்புநம்மில் பாப்பா
—இதைச்
சித்தம் உணர்ந்தொழுகும் பாப்பா

---

சமயத்தில் சுதந்திரப்பாதையில் அகிலம்நிலையாகக் காலூன்றிநிற்கும் அமெரிக்கமக்கள் உறுதுணையாக இருந்துள்ளனர். சுதந்திரமக்கள், சுதந்திரத்தை விரும்பும்மக்கள் ஆகியவர்களுக்கு ஆக்கிரமிப்பை எதிர்த்துநிற்க ஆயுதங்கள்எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுமுக்கியம் உணவும். ஆகவே, இதைநன்குணர்ந்து அமெரிக்கா தனதுஉணவுஉற்பத்தியைப் பெருக்குகிறது.

# சுகாதாரப் பகுதி

## வெள்ளைப்பூண்டின்விசேஷம்

தற்கால உலகில் வெகுபேர்களுக்கு மிதமிஞ்சிய இரத்த அழுக்கம் (Blood Pressure) என்ற கோளாறு இருப்பதாகத் தெரிகிறது. இவ்வியாதிக்கு வெள்ளைப்பூண்டு மிகவும் நல்லதென்று வைத்திய சாஸ்திரிகள் கூறுகின்றனர். ஓர் பிரபல டக்றர் வெள்ளைப்பூண்டைப் பற்றிப் பின்வருமாறு வரைந்துள்ளார்:

"சதாரணமாகக் கறிப்பதார்த்தங்களுக்கு உபயோகிக்கப்படும் வெள்ளைப்பூண்டு சரீரத்திலுள்ள அநேக வியாதிகளைப் போக்கவல்லதாய் இருக்கிறது. எமது நாட்டு மூதாதைகளும், உரோமையரும், எகிப்தியரும் தினந்தோறும் வெள்ளைப் பூண்டைப் பச்சையாய் மென்று சாப்பிட்டு வந்ததாகத் தெரிகிறது. அது இரத்தத்தையும், குடல்களையும் சுத்திபண்ண உதவும். பலவீனப்பட்ட நரம்புகளுக்கும் அது ஒரு உத்தீபன மருந்தாகும். விசேஷமாய் நெடுநாட்பட்ட இருமல், க்ஷயரோகம், சுவாசகாசம், கக்குவான் முதலிய நுரையீரல் சம்பந்தமான வியாதிகளுக்கும், 40 வயதுக்குமேல் உண்டாகக்கூடிய இரத்தஅழுக்கத்தைக் குறைப்பதற்கும் வெள்ளைப்பூண்டுத் திராவகம் மிகவும் சக்திவாய்ந்தது. வெள்ளைப்பூண்டின் எண்ணெயில் சரீரத்தை வளர்க்கக்கூடிய சீவசத்துப்பொருட்களும், அயோடின், கல்சியம், பாஸ்பறிக் ஆசிட், பொட்டாசியம் முதலிய உலோக சத்துக்களுமுண்டு.

"ஆகையால் தினந்தோறும் இரண்டு மூன்றுபல்வெள்ளைப்பூண்டை இடித்து அச்சாற்றைப் பசுப்பாலுடன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் அவர்கள் சீக்கிரம் வளருவார்கள். அதைத் தினந்தோறும் உபயோகித்து வருகிற குடும்பங்களில் காசவியாதியும் இலகுவில் அணுகாது. சிலருக்குக் கழுத்தில்உண்டாகும் கண்டமாலை என்னும் கட்டிக்கும் வெள்ளைப்பூண்டு நல்ல குணத்தைக் கொடுக்கிறது."

## எலும்பு க்ஷயரோக சிகிச்சை

பால்கிறிஷன் மங்கா எனும் இந்திய டக்றர்ஒருவர் எலும்பு க்ஷயரோகத்திற்குத் தாம் ஆச்சரியமான ஓர் சிகிச்சை முறையைக் கண்டுபிடித்திருப்பதாக அறிவித்திருக்கின்றார். தற்சமயம் டக்றர்மார் அறிந்துள்ள சிகிச்சைமுறைப்படி எலும்பு க்ஷயரோகத்தைக் குணப்படுத்த அநேகவாரங்கள் பிடிக்கின்றன. ஆனால், தாம் கண்டுபிடித்துள்ள சிகிச்சை முறையோ நாட்பட்ட நோயைத்தானும் அதிகமாக இரண்டு வாரத்தில் குணமாக்கிவிடுமென டக்றர் மங்கா கூறுகின்றார். இவர் தாம்கண்டுபிடித்த புதியமுறையைப் பரிசோதனை செய்வதற்காக அமெரிக்கஐக்கியதேசத்துக்கு அனுப்பிவைக்க ஆயத்தப்படுகின்றார். அதன் மேல் நோயாளிகளைப் பெருங்கூட்டமாக வைத்து அம்முறைகொண்டு சிகிச்சை நடத்துமாறு அதனை உலகசுகாதார ஸ்தாபன ஆதீனத்துக்குக் கையளிப்பார்.

## நேர்த்தியின் பூர்த்தி

திரு இருதயநாதருடைய இரக்கத்தினாலும் அர்ச். சந்தாஞ்சியார், அர்ச். பாத்திமாமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் நாங்கள் கேட்டமன்றாட்டு அனுகூலமானது. நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறோம். அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்கள் எங்கும் புகழப்படுவதாக.

P. Philippaiah
ஊறணி.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 17 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org